விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 31 வியாழக்கிழமை (16.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 209




# மைத்திரி மதிவியூகம்

## தனக்கும் பாதுகாப்பு தாவியவர்களுக்கும் பாதுகாப்பு

## சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தை நடத்த தடை விதிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசிய கட்சிக்கு தாவியோரை கட்சியிலிருந்து நீக்கவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பதவியிறக்கும் நோக்கத்தோடும் கட்சித் தலைவரின் அனுமதியின்றி நேற்றிரவு ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திரக் கட்சியின் மத்தியக்குழு கூட்டத்தை தடை செய்யும் உத்தரவொன்றை கொழும்பு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த மீண்டும் தோற்பார்-ஜோதிடர்

(கொழும்பு)

ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பிய கடவுள் அவர் மீண்டும் அதிகாரத்திற்குவர இடமளிக்க மாட்டார் என ஜோதிடர் இந்திக தொட்டவத்த தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார். கடந்த காலங் 24 ஆம் பக்கம் பார்க்க

## வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சக அதிபர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான அனுமதியை தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் அரச அச்சகத்திற்கு வழங்கியுள்ளார். 23 ஆம் பக்கம் பார்க்க




## சுதந்திரக் கட்சியின் தேர்தல் குழு தலைவராக மகிந்த நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைகள் குழுவின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று காலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது இந்த தீர்மானமெடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இதற்கிடையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னைப் 23 ஆம் பக்கம் பார்க்க

## அனைத்திலும் மைத்திரி இணக்கம் - சுசில்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதல் பிரசாரக் கூட்டத்தை எதிர்வரும் 17 ஆம் திகதி அனுராதபுரத்தில் நடத்தவும் தேர்தல் பிரசார நடவடிக்கை குழுவின் தலைவராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கியதாக முன்னணியின் பொதுச் செய 23 ஆம் பக்கம் பார்க்க







நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் இன்று விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இன்று முதல் சாட்சியங்களிடம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதுவரை ஆணைக்குழுவிற்கு 820 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் அவற்றில் 115 முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

சுமார் 60 முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்த விசேட பொலிஸ் பிரிவின் உதவி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

2010-ம் ஆண்டு ஜனவரி 10-ம் திகதி முதல் 2015-ம் ஆண்டு ஜனவரி 10-ம் திகதி வரையான காலப்பகுதியில் நடந்தவை தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

5 பேர் கொண்ட ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியங்கள் விசாரிக்கப்பட உள்ளதுடன் ஐவர் கொண்ட இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மார்ச் மாதம் நியமித்தார்.

ஆணைக்குழுவில் பிரிதி சூரியசேன, அமிந்த சேனவிரத்ன, விக்கும் களுஆராச்சி, கியான் குலதுங்க, முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் பி.ஏ. பிரேமதிலக்க ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

பாரதூரமான ஊழல், மோசடிகள், அரச சொத்துக்கள், அரச பலம் மற்றும் அரச அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியமை சம்பந்தமாக ஆணைக்குழு விசாரணை நடத்தும் என அதன் செயலாளர் எல். சில்வா தெரிவித்துள்ளார். (செ-11)

# சு.கவுக்கு சிறந்த தலைவர் வேண்டும்

## திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேனவை விட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிறந்த தலைவர் ஒருவர் தேவை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்ற போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வழிநடத்த புதிய தலைவர் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றிருந்த ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான நிலைப்பாடு அவரது நேற்றைய (நேற்று முன்தினம்) உரையில் தெளிவானதாக கூறியுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டியூ. குணசேகர அங்கு வந்திருந்த போதிலும் ஊடகங்களிடம் கருத்துக்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை. (செ-11)


# பொது அறிவித்தல்

இதுவரை காலமும் **"மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்"** என்னும் பெயரில் இயங்கி வந்த இல்லம் 06-07-2015ந் திகதியிலிருந்து எமது இல்லத்தினது பெயர் **"மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்"** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதுடன் வங்கிக் கணக்கிலக்கம் எதுவும் மாற்றம் செய்யப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றோம்.

யுத்தத்தினால் கடுமையான பாதிப்பிற்கு உட்பட்ட ஆதரவற்ற 400க்கு மேற்பட்ட குழந்தைகளைப் பராமரித்து வரும் எமது இல்லத்திற்கு பொது மக்களது பேருதவி அவசியம் தேவைப்படுகிறது. பொது மக்களது உதவியின் காரணமாக எமது இல்ல ஆதரவற்ற குழந்தைகளிலிருந்து 2 பேர் பட்டயக் கணக்காளர் கல்வி கற்க எம்மால் உதவ முடிந்துள்ளது. இவர்கள் பட்டயக் கணக்காளர் கல்வியுடன் 3ஏ எடுத்து பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவக் கற்கை நெறியினையும் தொடர்கிறார்கள். இதனை விட மேலும் 8 பேர் பல்கலைக்கழக கலைத்துறையில் கல்வி கற்று வருகின்றார்கள்.

மேலும் 45ற்கு மேற்பட்ட குழந்தைகள் க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தரத்தில் கற்று வருகின்றார்கள்.

பொது மக்களது தொடர்ச்சியான கொடையினால் இவர்களுக்கு உயர்ந்த கல்வியினை வழங்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதனையிட்டு அனைத்து நன்கொடையாளர்களுக்கும் குழந்தைகள் சார்பாக பெரு நன்றி கூறுகின்றோம்.

அன்புக்கினிய பொது மக்களே!

நன்கொடையளிக்க விரும்புவோர் பின்வரும் கணக்கிற்கு மட்டும் நன்கொடையளித்து இயன்றளவு ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| கணக்கின் பெயர் | : | மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் |
| முகவரி | : | ஜெயந்திநகர், கிளிநொச்சி. |
| வங்கிக்கணக்கிலக்கம் | : | 000 999 1351 |
| வங்கியின் பெயர் | : | இலங்கை வங்கி |
| கிளையின் பெயர் | : | கிளிநொச்சி |

இரகசியக்குறியீடு (Swift code) BCEY LK LX

தயவு செய்து இயன்றளவு இக் குழந்தைகளுக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

என்றும் சமூக சேவையிலுள்ள

தி.இராசநாயகம்
தலைவர்,

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(சி-1590)



# மரண அறிவித்தல்



## தம்பு நடராஜா

தோற்றம்: 08.03.1928
மறைவு: 10.07.2015

பூநகரி மட்டுவில்நாடு சரவணப்பொய்கையைப் பிறப்பிடமாகவும், கனடா **Markham** ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடராஜா அவர்கள் *10-07-2015* வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இளையதம்பி உடையார் அவர்களின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பு சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அற்புதமலர் அவர்களின் அன்புக் கணவரும், சரவணபவன் (இந்தியா), மஞ்சுளாதேவி(லண்டன்), மங்களேஸ்வரி(கனடா), திருஞானபவன் (கனடா), சதானந்தபவன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கோவிந்தராஜா அவர்களின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, கமலாதேவி, யோகநாதன், தனபாலசிங்கம், பாரதிதாசன், சிறிகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், லலிதரா (இந்தியா), சந்திரமோகன்(லண்டன்), பிரபாகரன், தீபா, நீரஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சீவரட்ணம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகி அவர்களின் பெறாமகனும், பாலாஜி, சத்தியா, பிரசாந்(இந்தியா), அபிராமி, அர்ச்சுனா, அகிலா, அனுசியா (லண்டன்), காலஞ்சென்ற மகாசங்கர் மற்றும் சாயீசன், பபிசன், தர்சன், பிரசாந்தி, வாகீசன், வைஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

திருஞானபவன்
(ஞானா) கனடா
0014168904363

(சி-1595)



# இசை நிகழ்ச்சி

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்

## இசைப் பேருரை

வழங்குபவர்
பேராசிரியர் முனைவர்
**பிரமிளா குருமூர்த்தி**
(இசைத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்)

மிருதங்கம்: திரு. K.கஜன்
வயலின்: K.குகபரன்

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 2015.07.17 வெள்ளிக்கிழமை, மாலை 6.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

(1147)



# விவேகானந்த சபை - கொழும்பு

## அகில இலங்கை சைவசமய பாடப்பரீட்சை - 2015

(தரம்: 3-11 வரை அரச சமய பாடத்திட்டத்திற்கு அமைவானது)

கடந்த (84) எண்பத்து நான்கு வருடங்களாக நடைபெற்று வரும் மேற்படி பரீட்சை தற்பொழுது சர்வதேச மட்டத்திலும் நடைபெறுகின்றது.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அனர்த்த சூழ்நிலையில் பரீட்சைக்கு தோற்றும் பாடசாலைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இந்த விடயம் 28.06.2015 நடப்பாண்டு பொதுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கமைவாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களின் பாடசாலைகளுக்கு மட்டும் 2015-ம் ஆண்டிற்கான பரீட்சையை இலவசமாக அனுமதிப்பதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மாவட்டங்களின் பாடசாலைகளின் அதிபர்களின் தகவலுக்காக அறியத்தருகின்றோம்.

3-ம் வகுப்பிலிருந்து 11-ம் வகுப்பு வரையிலான மாணவர்களின் முழுவிபரங்களை தனித்தனித் தாளில் தயாரித்து 15.09.2015 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். பரீட்சைத் திகதி இலங்கை முழுவதும் எதிர்வரும் 08.11.2015 இல் நடைபெற இருக்கின்றது.

அனுப்பப்பட வேண்டிய விலாசம்
கௌரவ பொதுச் செயலாளர்
விவேகானந்த சபை
34, விவேகானந்த மேடு, கொழும்பு - 13

(சி-1596)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603



# நீங்கள் ஓய்வுபெற்று விட்டீர்களா?



உங்களின் ஓய்வுக் காலத்தினை
அனுபவிக்கும் அதேவேளை
பணம் சம்பாதிப்பதையும் தொடர
**இதோ ஓர் வாய்ப்பு**

உங்கள் பயணத்தை இப்பொழுதே ஆரம்பியுங்கள்

**T.P.No:0777 121 868**
**Address: 62/6, Stanley Road, Jaffna.**

(1144)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு

போதைப்பொருள் பாவனை ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பாடசாலை மாணவ,மாணவிகளுக்கான பொலிஸ் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நெல்லியடி கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் பருத்தித்துறை காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜபார் மற்றும் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஐ.கே. திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை மாணவர்களுக்கு வழங்கியிருந்தனர். இதன் போது மாணவ சமூகங்கள் எவ்வாறு போதைப்பொருள் பாவனையில் சிக்குகின்றார்கள் எனவும் இதிலிருந்து எவ்வாறு விடுபடவேண்டும் என பல தரப்பட்ட ஆலோசனைகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 18 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4453 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 67 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/4472 |
| பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 26 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: மிருகவைத்தியர்<br>தொ.இ: B/4455 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 17 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC<br>தொ.இ: G/4474 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 42 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பொறியியல் லண்டன் PR<br>தொ.இ: B/4456 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 8 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/4475 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4457 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 67 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/4476 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## உதவி வழங்க முன்வருகை

(கரணவாய்)

மாற்று ஆற்றல் உடையவர்கள் மற்றும் தனிமையில் வசிக்கும் முதியவர்களுக்கு உதவுவதற்கு கரவெட்டி பிரதேச செயலகசமூகசேவைப்பிரிவு முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் கரவெட்டிபிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் மலசலகூட வசதி அற்ற அல்லது கொமட் வசதி தேவைப்படுவோர் கரவெட்டி சமூக சேவைப் பிரிவுடன்தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3-60)


தேவை

நீச்சல் தடாக பராமரிப்பாளர்

அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும்.நீச்சல் தெரிந்தும் பழகும் திறன் கொண்டவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பேர் ஊர்தி சாரதி

மேல் தட்டுக் கொண்ட சுற்றுலா பயணிகள் பேர் ஊர்தி ஓட்டுவதற்கு அனுபவம் மிக்க சாரதி தேவை.
அனுபவம் அற்றவர்கள் தயவு செய்து நமது பொன்னான நேரத்தை மீதப்படுத்துங்கள்.
(C-1591)

T.P-021 222 0606
நேர்முகப்பரீட்சை
Hotel Lux Etoiles
34, Chetty Street Lane, Nallur,
Jaffna.T.N-021 222 0606



அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
இன்று பூங்காவனத் திருவிழா



உய்யும் நெறிய தன் உபாயம் நீ அருள்வாய்!

சைவத் திருநெறியும் அற நெறியும் ஓங்கி வளர்
சீர் இணுவைத் திருவூரை காக்கின்ற கதிர்வேலா
நின் அருள்தனை வேண்டும் பக்தர் நின் திரு வீதி எல்லாம்
பண்ணோடு இசை கலந்து பாடுவார் பஜனை கீதம்

தம் துயர் போக்க எண்ணி இயற்றிய நேர்த்தி தனை
குறைவிலா பக்திமேவ நிறைவு செய்து ஏத்தும் அன்பர்
துயர் தனைப் போக்கி ஆங்கே. களிப்புறச் சுற்றத்தோடு
வாழும் வரம் அருளும் எங்கள் நொச்சியம் பதியானே.

உலகியல் பற்றைத் தூண்டும் உள்ளத்து உணர்வை நீக்கி
உய்யும் நெறியதன் உபாயம் நீ அருள்வாய்
மேதகு ஈழ நாட்டின் மேவும் எண்திசை அனைத்தும்
எந்தையர் வாழ்வு ஏற்றமுற தக்கதோர் வழிசமைப்பாய்

கவி ஆக்கம்:இணுவை சுகந்தி

பூங்காவனத் திருவிழா உபயகாரர்



யாழ்.நகரில் இன்று புதியதோர் உதயம்

பிராவோ ரெஸ்ரோரன்ட்

சூப் வகைகள்,பிரியாணி, பிறைட்றைஸ்,நூடில்ஸ்,கொத்து இடியப்பபிரியாணி, பிட்டுக்கொத்து, டெவில் வகைகள்,மில்க் கேக், யூஸ்,ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் பாஸ்தா,பீட்சா வகைகளை இங்கே பெற்றுக் கொள்ளலாம். (1131)

297,பிறவுண் றோட், கலட்டிச் சந்தி , யாழ்ப்பாணம்.021 790 4795


## ராசி பலன்

16.07.2015
(ஆனி 31, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிவரை
அமாவாசை முற்பகல் 7.39 மணிவரை
புநர்பூசம் பிற்பகல் 3.59 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை
சுபநேரம்-7.30-9.00 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூரி செவ், சந் |
| | காலை 9.49 மணிக்கு கட- சந் | | புதன் |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்,முயற்சிகள் கைகூடும்.

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்:** உடன் பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் தகவல்கள் வந்து சேரலாம், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்:** நாவன்மையால் நற்பெயர் எடுப்பீர்கள், கரைந்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்கள் பெறுவீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றிதரும்.

**கும்பம்:** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியமான நாள், வருமானம் திருப்தி தரும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம், உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடக்க முன்வரலாம்.

**மகரம்:** சந்தித்த நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்,தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்குரிய வாய்ப்புண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்:** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள்,கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்,திடீர் பயணமொன்று உருவாகும் வாய்ப்புண்டு.

**தனுசு:** எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, குடும்பச் செலவுகள் அதிகரிக்கும் நாள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள்,பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்,மகிழ்ச்சி தரும் விதத்தில் தொலைபேசி அழைப்புகள் வந்து சேரலாம்.

**துலாம்:** குடும்பங்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்,முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம்,பிரியமானவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** இளைய சகோதரர் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்,எடுத்த கருமங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்ன செய்யப்போகிறது உச்சநீதிமன்றம்?

எழுவர் விடுதலை மீதான தீர்ப்பு மனித உரிமைகளோடு, மாநிலங்களின் உரிமைகள் சார்ந்ததாகவும் அமையப் போகிறது. குற்றம் - குற்றவாளி - தண்டனை என்ற முக்கோண உறவு மனித உரிமைகளின் வெளிச்சத்தில் பார்க்கப்பட வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கும் இன்றைய சூழலில், இதற்கு நேர் தொடர்புடைய ஒரு வழக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட முழு ஆயத்தில் விசாரணைக்கு வருகிறது.



ஒரு குற்றம் நிகழ்ந்து, அது மெய்ப்பிக்கப் பட்டு, குற்றவாளிக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, அவர் தண்டனை அனுபவித்து மீண்டு வருவதில் மூன்று கட்டங்கள் உள்ளன:

1. குற்றத் தீர்ப்பு (Conviction). அதாவது, குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான குற்றத்தை மெய்ப்பித்தல். அவர்தான் குற்றவாளி எனத் தீர்மானித்தல்.

2. தண்டனைத் தீர்ப்பு (Sentence). தண்டனை என்ன? அதன் அளவு என்ன என்று தீர்மானித்தல்.

3. தண்டனைக் குறைப்பு (Remission). குற்றவாளிக்குத் தண்டனைக் குறைப்பு அல்லது தண்டனைக் கழிவு தந்து வெளியே விடுதல்.

இந்த மூன்று கட்டங்களையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால், முதல் கட்டத்தில் குற்றத்தைப் பார்க்க வேண்டும். இரண்டாம் கட்டத்தில் குற்றத்தையும் குற்றம் புரிந்த மனிதனையும் பார்க்க வேண்டும். மூன்றாம் கட்டத்தில் குற்றத்தை மறந்துவிட்டு குற்றம் புரிந்த மனிதனை மட்டும் பார்க்க வேண்டும். குற்றத்தைத் தடுத்தல், குற்றவாளியைத் தண்டித்தல், அதன் வழி அவருள் அடங்கிய மனிதத்தை மீட்டல் என்ற மூன்று நோக்கங்களையும் சீர்திருத்தக் குற்றவியல் வலியுறுத்துகிறது. இது பல முற்போக்கான உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளிலும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

### மனித உரிமைப் பார்வை

குற்றத் தீர்ப்பின்போது குற்றத்தின் தன்மை, அது நிகழ்ந்த விதம் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும். யார் செய்திருப்பினும் குற்றம் குற்றமே என்பதுதான் குற்றத் தீர்ப்பின் அடிப்படை. தண்டனைத் தீர்ப்பின்போது, அதாவது என்ன தண்டனை, கொலைத் தண்டனையா, சிறைத் தண்டனையா, எவ்வளவு காலச் சிறைத் தண்டனை என்றெல்லாம் தீர்மானிக்கும்போது குற்றத்தின் தன்மை, குற்றவாளியின் நிலை இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தண்டனைக் குறைப்பின்போது, அதாவது சிறைத் தண்டனை பெற்ற ஒருவரை தண்டனைக் குறைப்பு அல்லது தண்டனைக் கழிவு தந்து விடுதலை செய்யலாமா என்று கருதிப் பார்க்கும்போது, குற்றத் தின் தன்மைபற்றிப் பேசிக்கொண்டிராமல், குற்றம் புரிந்தவரிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், வருங்காலத்தில் அவர் சமூகத்தில் மறுவாழ்வு பெறும் தகுதியையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இந்த மனித உரிமைப் பார்வை, குற்றங்களை நியாயப்படுத்துவதோ, குற்றவாளிகளைத் தண்டனையிலிருந்து பாதுகாப்பதோ அல்ல என்பது தெளிவு. குற்றங்களை ஒழிப்பதன் பெயரால் குற்றவாளிகளையே ஒழித்துவிடக் கூடாது, அவர்களின் மனிதத்தையே அழித்துவிடக் கூடாது என்பது மட்டுமே மனித உரிமையின் மன்றாட்டு.

### தண்டனையின் நோக்கம் எது?

தண்டனையின் நோக்கம் குற்றத்தை ஒழிப்பதால் குற்றவாளி களை ஒழிப்பதா? உச்ச நீதிமன்றம் நாளை தன்முன் வரும் வழக்கில் விடை காண வேண்டிய வினாக் களின் உட்கரு இதுதான்.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்துக்கு எப்படி வந்தது? முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் கிளை வழக்காக வந்தது என்பதே இந்த வழக்கின் பின் மறைந்துள்ள அரசியல் ஆவேச உணர்ச்சிகளைப் புலப்படுத்தும். பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவருக்கும் தூக்குத் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனையாகக் குறைப்பதை எதிர்த்து, இந்திய அரசு தொடுத்த மீளாய்வு வழக்கைத் தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்ற நீதிபதி சதாசிவம் தலைமையிலான ஆயம், ஆயுள் தண்டனை என்றால் ஆயுட்காலச் சிறைதான் என்றபோதிலும், மாநில அரசு இவர்களைக் குற்ற நடைமுறைச் சட்டத்தின் தண்டனைக் குறைப்பு விதி களைப் பயன்படுத்தி விடுதலை செய்ய முடியும் என்பதைச் சுட்டிக்காட்டியது.

இதையொட்டி தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த 2014 பெப்ரவரி 19 ஆம் திகதி சட்டப் பேரவையில் ஓர் அறிவிப்பு செய்தார்: "ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பெற்று கடந்த 23 ஆண்டுகளாகச் சிறையில் இருந்துவரும் பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய எழுவரையும் விடுதலை செய்வதெனத் தமிழக அமைச்சரவை தீர்மானித்துள்ளது. உரிய சட்ட விதிகளின்படி இந்த முடிவு மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும். மூன்று நாளைக்குள் டெல்லியிலிருந்து மறுமொழி வரவில்லை என்றால், நாமே அவர்களை விடுதலை செய்வோம்" என்றார் முதல்வர்.

இந்திய அரசு, தமிழக அரசுக்கு எவ்வித மறுமொழியும் அனுப்பாமல் தமிழக அரசின் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. பெப்ரவரி 20 அன்று தமிழக அரசின் முடிவை உச்ச நீதிமன்றம் நிறுத்திவைத்து விட்டது.

இந்திய அரசு தொடுத்த வழக்கோடு தமிழ்நாட்டுக் காங்கிரஸார் சிலரும் சேர்ந்து கொண்டு புதுப்புது சிக்கல்களைக் கிளப்பினர்: "தூக்குத் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனையாகக் குறைத்த பின், மீண்டும் ஒருமுறை தண்டனைக் குறைப்பு வழங்க முடியுமா? குற்ற நடைமுறைச் சட்டத்தின் 432 முதல் 435 வரையிலான விதிகளின்படி இப்படிச் செய்ய முடியும் என்றால், இந்தக் குற்ற நடைமுறைச் சட்ட விதிகளே செல்லாதா" என்றுகூட அவர்கள் வாதிட்டனர். இப்படிப்பட்ட வாதங்களுக்கு எவ்வித சட்ட அடிப்படையும் இல்லையென்றாலும், முன்னாள் பிரதமர் மீது அவர்கள் வைத்துள்ள தீவிரப் பற்றுதலின் வெளிப்பாடு என்று எல்லாவற்றையும் விளங்கிக்கொள்ள வேண்டியதே.

### விடையளிக்க வேண்டிய வினாக்கள்

உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட முழு ஆயம் இந்த வழக்கை விசாரிக்கவுள்ளது. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால், இந்தியா முழுக்க நூற்றுக் கணக்கான ஆயுள் சிறைக் கைதிகளின் முன்-விடுதலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசும் எல்லா மாநில அரசுகளும் விடையளிக்க வேண்டிய சில வினாக்களை உச்ச நீதிமன்றம் கேட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 72 வழங்கும் அதிகாரத் தைப் பயன்படுத்தி இந்திய அரசோ, உறுப்பு 161 வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாநில அரசோ ஒரு முறை தண்டனைக் குறைப்பு வழங்கிய பின், குற்ற நடைமுறைச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி மாநில அரசு மீண்டும் ஒரு முறை தண்டனைக் குறைப்பு வழங்க முடியுமா? (தொடரும்)

-இணையம்-




## நீருக்குள் மூழ்கப்போகும் பூமி: அதிர்ச்சி தகவலை வெளியிட்ட விஞ்ஞானிகள்



பூமியிலுள்ள நிலப்பரப்புகள் மறைந்து மீண்டும் தண்ணீர் உலகமாக மாறிவிடும் என ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

இங்கிலாந்தின் Bristol பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர் Bruno Dhuime என்பவரும் அவரது குழுவினரும் இணைந்து மேற்கொண்ட ஆராய்ச்சியில் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்டங்களின் மேலோட்டின் தடிமன் குறைந்து வருவதாகவும், 2 பில்லியன் ஆண்டுகளில் பூமி முழுவதும் மீண்டும் தண்ணீரால் சூழப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் தண்ணீரிலிருந்து நிலம் வெளிவரத் தொடங்கியது. கண்டங்களின் மேலோட்டின் தடிமன், அதன் அதிகபட்ச அளவான 40கி.மீ., அளவை ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எட்டியது.

அதன் பின் அதன் தடிமன் குறைந்தபடியே உள்ளதாகவும், கண்டங்களின் மேலோடுகள் அரிப்படைந்து வருவதால், பூமி மீண்டும் நீரில் மூழ்கிவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




## சீப்பு அடை



### தே.பொருள்கள்:-

அரிசி மா- 4கப்
உளுந்தம் பருப்பு-1 கப்
தேங்காய் பால்- 400மில்லி
உப்பு, எண்ணெய் -தே.அளவு

### செய்முறை:-

அரிசியை அரை மணி நேரம் ஊறவைத்து தண்ணீரை வடித்து நிழலில் உலர்த்தவும். பின்னர் அதை மிக்ஸியில் அரைத்து சலித்து எடுத்துக்கொள்ளவும்.

உளுந்தம்பருப்பை வெறும் பாத்திரத்தில் வறுத்து, மிக்ஸியில் மாவாக அரைத்து, சலித்து எடுத்துக்கொள்ளவும். தேங்காய்ப்பாலை லேசாக சூடாக்கி அரிசி மா, உளுந்தம் மா, உப்பு, ஆகியவற்றுடன் சேர்த்து பிசைந்து கொள்ளவும்.

இந்த மாவை ரிப்பன் அச்சு வைத்த முறுக்கு தாழியில் நிரப்பி, நீள நீளமாகப் பிழிந்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி எடுத்து விரலில் மோதிரம் போல சுற்றி முனைகளை ஒட்டிக்கொள்ளவும். பின்னர் அதை சூடான எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் உடலில் வெடிகுண்டு சோதனை

## ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அராஜகம்

(பக்தாத்)

**குழந்தையின் உடலில் வெடிகுண்டை கட்டி வெடிக்கச் செய்து, ஆயுத சோதனையில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஈடுபட்டதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

ஐ.எஸ் ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட வீரரின் குழந்தையை ஆயுத சோதனைக்கு பயன்படுத்திய இந்தச் சம்பவம் கடந்த வாரம் நடந்ததாக ஈராக் பாதுகாப்பு சபைத் தலைவர் சாதிக் அல் ஹுசைனி தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் தியாலா மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் அவர்களது பயிற்சி முகாமில் வழக்கமான ஆயுத சோதனை செய்தது ஐ.எஸ்.ஐ.எஸ். குழு. போராளிகளுக்கு வெடிகுண்டுகளை செயற்படுத்தும் முறை குறித்து விளக்கம் காண்பிக்கப்பட்ட போது, குழந்தையின் உடலில் வெடிகுண்டுகளை கட்டிவிட்டு தொலைவிலிருந்து ரிமோட் மூலம் அதை வெடிக்கச் செய்ததாக சாதிக் அல் ஹுசைனி தெரிவித்தார்.

இதில் அந்தக் குழந்தை உடல் சிதறி பலியானது. பல படுகொலைகளை செய்து வரும் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகளின் செயல் தற் போது உச்சக் கட்டத்தை அடைந்து பெண்கள் மற்றும் குழந்தைகளையும் பலியாக்கி கொண்டிருக்கிறது.

சிரியா மற்றும் ஈராக்கில் சன்னிப் பிரிவு பயங்கரவாதிகள், ஷியா பிரிவினரை குறி வைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்களது கட்டுப்பாட்டில் பல மாகாணங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# ஏமன் போரை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர சவுதி மன்னருடன் ஒபாமா அவசர ஆலோசனை

ஏமன் நாட்டில் நான்கு மாதங்களாக நடைபெற்று வரும் உள் நாட்டுப் போரை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக சவுதி மன்னர் சல்மானுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஏமனில் சன்னி வம்சத்தை சேர்ந்த அப்த் ரபு மன்சூர் ஹாடி ஜனாதிபதியாக பதவி வகித்து வரு கிறார். இந்த ஆட்சியை எதிர்த்து சன்னி வம்சத்துக்கு எதிரான ஹவு த்தி கிளர்ச்சி படையினர் போரிட்டு வருகிறார்கள். இந்த ஹவுத்தி போராளிகளுக்கு ஷியா பிரிவினரின் ஆதிக்கம் நிறைந்த நாடான ஈரான் மறைமுக ஆதரவு அளிப்பதாக குற்றம்சாட்டப்படுகின்றது.

ஜனாதிபதி அப்த் ரபு மன்சூர் ஹாடிக்கு ஆதரவாக சவுதி அரேபியாவும் இந்த போரில் குதித்துள்ளது. இந்தப் போரில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்கான அப்பாவி பொது மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சில தற்காலிக நிறுத்தங்களுக்கு இடையில் ஆவேசமாக நடைபெற்றுவரும் இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்த நிலையில் தற்போது மேலும் ஆறு நாட்கள் தற்காலிக போர் நிறுத்தத்துக்கு இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.

எனினும், நேற்று முன்தினம் ஏமனின் சில பகுதிகளில் இரு படையினருக்கும் இடையில் மோதல்கள் நடந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதியில் இருந்து ஹவு த்தி போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த ஏடன் விமான நிலையத்தை சவுதி படைகளின் உதவியுடன் ஏமன் ராணுவம் மீட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அணுசக்தி திட்டம் குறித்து ஈரானில் விசேட ஒப்பந்தம்



(டெஹ்ரான்)

ஈரானின் அணுசக்தித் திட்டத்தைக் கட்டுப்படுத்துவது பற்றிய விசேட ஒப்பந்தம் நேற்று முன்தினம் எட்டப்பட்டுள்ளது.

பல வருடங்களாக நடந்து வந்த பேச்சுவார்த்தையின் முடிவில் எட்டப்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தத்தின்படி, ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த சர்வதேச பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும்.

பதிலாக, அணுஆயுதம் தயாரிப்பதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஈரான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஈரானின் அணுசக்தித் திட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ரஷ்யா, ஜேர்மனி ஆகிய செல்வாக்குமிக்க ஆறு நாடுகளின் குழுவிற்கும் ஈரானுக்கும் இடையில் கடந்த ஆறு வாரங்களாகத் தீவிரமாக நடந்துவந்தது.

இப்போது எட்டப்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தத்தை பல தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்காமல் இருக்கிறதா என்பதை இனி சர்வேதச சமூகம் அறிந்துகொள்ள முடியும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை ஈரான் மீறினால் முன்பிருந்த தடைகள் மீண்டும் விதிக்கப்படும் எனவும் ஒபாமா தெரிவித்திருக்கிறார்.

ஈரானின் ஜனாதிபதி ஹஸன் ரௌஹனியும் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை ஈரான் மதித்து நடக்குமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இஸ்ரேல் இந்த ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்திருக்கிறது. இது ஒரு அதிர்ச்சி தரத்தக்க வரலாற்றுத் தவறு என இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஐநாவின் ஆய்வாளர்கள் ஈரானின் இராணுவ அணுசக்தித் தலங்களைக் கண்காணிக்க முடியும்.

இருந்தபோதும், அங்கு செல்ல அவர்களுக்கு அனுமதி மறுத்தால் ஈரான் வாதாட முடியும்.

இந்த ஒப்பந்தம் மீறப்பட்டால் 65 நாட்களில் மீண்டும் தடைகள் அமுலுக்கு வரும் என்பதை ஈரான் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால், ஒப்பந்தத்தின் முழுமையான விபரங்கள் வெளிவரவில்லை.

இருந்தபோதும் ஈரான் ஆயுதங்கள் வாங்குவதற்கான தடை ஐந்தாண்டுகளுக்கும் ஏவுகணைகள் வாங்குவதற்கான தடை எட்டாண்டுகளுக்கும் நீடிக்கும்.

எண்ணெய் - எரிவாயு வர்த்தகம், நிதி பரிமாற்றம், விமானத்துறை, கப்பல்துறை ஆகியவற்றில் விதிக்கப்பட்டிருந்த தடைகள் விலக்கிக்கொள்ளப்படும்.

உலகம் முழுவதும் முடக்கி வைக்கப்பட்டிருந்த பல பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள ஈரானின் சொத்துக்கள் விடுவிக்கப்படும்.

ஈரானின் மீதான தடைகள் நீக்கப்படும் நிலையில் அந்நாட்டிடம் பெரும் அளவில் நிதி சேரும்.

அந்த நிதி எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதை வல்லரசு நாடுகள் கண்காணிக்க வேண்டும் என பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்ஸ்வா ஒல்லாந்து தெரிவித்துள்ளார். (இ-7)




# சீனாவில் வீடியோ பார்த்த 20வெளிநாட்டவர்கள் கைது

(பீஜிங்)

சீனாவில் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் கொள்கை குறித்த வீடியோவை பார்த்த 20 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசுக்கு எதிராக கலகம் செய்யும் அமைப்புகள் மீது அடக்கு முறைகளை கையாளும் நாடுகளில் முதன்மையானது சீனா. சிறிய குற்றங்களுக்கு மிகப்பெரிய தண்டனை அளிக்கும் சீனாவில், ஏராளமான அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் சீனாவுக்கு சுற்றுலா மேற்கொண்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 20 சுற்றுலா பயணிகளை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட இயக்கங்களின் கொள்கைகள் குறித்த வீடியோவை இணையத்தளத்தில் பார்த்ததாக, கைது நடவடிக்கைக்கு சீனா விளக்கம் அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளின் வலியுறுத்தலைத் தொடர்ந்து 11 சுற்றுலா பயணிகளை விடுவிக்க சீனா உத்தரவிட்டுள்ளது. தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 5 சுற்றுலா பயணிகள், பிரிட்டனைச் சேர்ந்த 3 பேர் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஒருவரை விடுதலை செய்ய சீனா மறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஸ்டர்களைப் பேருந்தில் ஒட்டுவது தேர்தல் சட்டத்திற்கு முரணானதாகும்

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்களது போஸ்டர்களை அரச பேருந்தில் ஒட்டுவது தேர்தல் சட்டத்திற்கு முரணானது. எனவே எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடும் பேருந்துகளின் சாரதி, நடத்துநருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யு.கே. வூட்லர் தெரிவித்துள்ளார்.**



இ.போ.ச சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லருக்கும் இடையில் யாழ்.பிரதான பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை சந்திப்பொன்று இடம்பெற்றது. அதன்போதே மேற்கண்ட அறிவித்தலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிவிடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச சொத்துக்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்பது தான் தேர்தல் சட்டம். ஆனால் தற்போது அரச சொத்துக்களை பயன்படுத்துவது குறித்தே அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. அந்தவகையில் நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வருகின்ற நிலையில் அரச சொத்தான இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் வேட்பாளர்களது போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறு பேருந்துகளில் ஒட்டப்பட்டிருந்தால் உடனடியாக அகற்றப்பட வேண்டும். இவ்வாறான பேருந்துகள் சேவையில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நேரத்திலோ அல்லது இரவு வேளையிலேயோ ஒட்டப்பட்டால் அதனை காவலாளி கவனிக்க வேண்டும். அவ்வாறு சேவையில் ஈடுபடும் பேருந்தில் போஸ்டர்கள் இருப்பின் பேருந்துகளை நிலையத்திற்குள் வரவோ வெளியில் செல்லவோ அனுமதிக்க வேண்டாம்.

மீறி ஒட்டப்பட்டால் அதனை அகற்றிய பின்னரே செல்ல அனுமதிக்க வேண்டும் நாங்கள் அறிவுறுத்தலை வழங்கி விட்டோம். இதனை மீறும் பட்சத்தில் குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# வடக்கு மாகாண கூட்டுறவாளர்களுக்கு மான்செஸ்டர் கூட்டுறவுப் பயிற்சி வகுப்பு





வடக்கு மாகாண சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தின் மான்செஸ்டர் கூட்டுறவுக் கல்லூரியினால் பயிற்சிப் பட்டறையொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சிப்பட்டறையை வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

வடக்கு கூட்டுறவுத்துறையின் அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் நூறு நாள் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு திட்டமாக, கூட்டுறவு இயக்கத்தை வடக்கில் பலப்படுத்துவதற்கான உதவியை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவரிடம் கேட்டிருந்தார். இதன் அடிப்படையிலேயே, பிரித்தானியத் தூதரகத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் ஐக்கிய இராச்சியத்தின் மான்செஸ்டர் கூட்டுறவுக் கல்லூரி நெதர்லாந்து மனித நேய செயற்பாட்டுக்கான கூட்டுறவு அமைப்புடன் இணைந்து வடக்கு மாகாணக்கூட்டுறவாளர்களின் தொழில்முயற்சியாண்மையை விருத்தி செய்யும் வகையில் பயிற்சிப்பட்டறையை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் ஒரு தொகுதி அங்கத்தவர்களுக்குப் பயிற்சியை ஆரம்பித்துள்ள மான்செஸ்டர் கூட்டுறவுக் கல்லூரி, பல்வேறு கட்டங்களாக ஒரு வருடத்துக்கு இத்திட்டத்தை வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் முன்னெடுக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

யாழ் நகரின் விடுதி ஒன்றில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையின் தொடக்க நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், இலங்கை சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் பி.ஏ. கிரிவெந்தனியா, மான்செஸ்டர் கூட்டுறவுக் கல்லூரியின் விரிவுரையாளர்கள் கலாநிதி லின்டா கூஷா, ஸ்டேர்லிங் சிமித், நெதர்லாந்து மனித நேயச் செயற்பாட்டுக்கான கூட்டுறவு அமைப்பின் திட்டப் பணிப்பாளர் ரஜனி இக்பால் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் ஆ.நித்தியவர்ணன் எழுதிய பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானக்குமாரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.




சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை ஓய்வு நிலை இணைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி திருமதி. அ. சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வரவேற்புரையினை யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர். ஆர்.எம்.சத்தியகுமார் வழங்கவுள்ளார்.

நூல் அறிமுகவுரையினை யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம், நூல் மதிப்பீட்டுரையினை முன்பிள்ளைக் கல்வி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தேவராசா முகுந்தனும் வழங்கவுள்ளனர். (இ-5)

# குடும்பஸ்தர் மீது கத்திக்குத்து

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு இமையாணன் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த நான்கு பேரின் கத்திக்குத்துக்கு இலக்காகி மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பொ.கிருஷ்ணராசா(வயது-39) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்கானவராவார்.

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் வைத்து பிரஸ்தாப நபரின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான நபர் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தீவிரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-60)

# செல்வா முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு

(தும்பளை)

குடத்தனை வடக்கு செல்வா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் முன்பள்ளியின் பெற்றோர் ஆசிரியசங்கத்தலைவர் ஆ.பிரபாநந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சிக்கிழக்கு பிரதேச செயலர் த.கனகேஸ்வரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக மணற்காடு பங்குத்தந்தை அருட்திரு ஜே.எல்மோ அருள்நேசன் அடிகளார், குடத்தனை வடக்கு கிராமசேவையாளர் த.தனுசியா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் கே.சூரியகாந்தி, கௌரவ விருந்தினர்களாக முன்பள்ளி கோட்ட இணைப்பாளர் திருமதி. ஜே. சிவஞானம், வடமராட்சி கிழக்கு தனியார் தொண்டு நிறுவன இணைப்பாளர் ரி.றெஜி மற்றும் குடத்தனை வடக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.அகிலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-19)

# தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன

(கரணவாய்)

மத்திய சமூக சேவைகள் அமைச்சினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் பொருட்டு கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பி.சுதர்சினி-கரணவாய் மேற்கு, ஐ.செல்வராணி -இமையாணன் கிழக்கு, எஸ். கலாஜினி- அல்வாய், ஜே.வனிதா- இமையாணன் கிழக்கு ஆகிய நான்கு பேருமே தையல் இயந்திரம் வழங்கப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்களை கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.(இ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்வரை மக்களுக்கான சேவைகள் தொடரும்

**ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கடைசிக்காலம் என சிலர் கூறிவருகின்ற போதிலும் எமது அரசியல் நிலைப்பாட்டிலும் செயற்பாட்டிலும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரையில் மக்களுக்கான சேவைகள் தொடரும் என்பதே எமது நிலைப்பாடாகும் எனக்கட்சியின் செயலாளர் நாயகமும் கட்சியின் முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

திருவிழாக் காலங்களில் வருகின்ற வியாபாரிகள் போன்று தேர்தல் காலங்களில் மட்டும் மக்களிடம் வந்து கற்பனைகளைக் கூறுகின்றவர்கள் நாங்கள் அல்லர். அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே காலங்காலமாகச் செய்து வருகின்றமை அனைவரும் அறிந்ததே. இதற்குத்தான் இம்முறை தேர்தலில் மக்கள் தக்க பதிலடி கொடுக்க காத்து நிற்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரரா்கிய நாம் எமது சொந்த சின்னமான வீணைச் சின்னத்திலேயே போட்டியிடுகின்றோம் என்பதுடன் இது தேர்தல்கள் ஆணையாளராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. மக்கள் எம்மிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே நாம் இம்முறை வீணைச் சின்னத்தில் போட்டியிடுகின்றோம்.

கடந்த காலங்களில் மக்களின் நலன்களுக்காகவே நாம் வேறு சின்னங்களில் போட்டியிட்டோம்.


"மத்தியின் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் கொள்கையையே நாம் வலியுறுத்தி வரும் அதேவேளை அதற்கு விசேட அதிகாரங்கள் என்று நாம் ஆரம்பகாலந்தொட்டு கூறிவந்திருக்கின்றோம்.

இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் 5 தேர்தல் மாவட்டங்களில் நாம் போட்டியிடுகின்றோம். கடந்த 60 வருடங்களாக தமிழ் மக்களை ஏமாற்றி வந்த தமிழ்த் தலைமைகள் மாற்றப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆனால் மாற்றுக் கட்சிகளிடம் எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதுவிதமான தீர்வுகளும் இல்லை.

"மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம்" என்ற எமது நிலைப்பாட்டிற்கு அமைவாக கடந்த காலங்களில் பல ஆயிரக்கணக்கான நிலங்களை விடுவித்துள்ள அதேவேளை மக்களின் அபிலாசைக்கேற்ப ஏனைய நிலங்களையும் விடுவிப்போம். இதேபோன்று அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமற் போனோர் தொடர்பிலும் எமக்கு மிகுந்த அக்கறை உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

எமது பகுதிகளில் யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட பயன்தரு மரங்களை மீள் நடுகை செய்யும் பொருட்டு பத்து இலட்சம் மரங்களை நடுகை செய்யும் திட்டமும் உள்ளது. அத்துடன் போசாக்கான உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, தொழில் நுட்பத்துடன் கூடியதான சுய தொழில் வாய்ப்பு மற்றும் புதிய தொழிற்சாலைகளை நிறுவுதல் உள்ளிட்ட திட்டங்களும் எம்மிடம் உள்ளன.

காணாமற்போனோர் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் அரசியல் உள நோக்கங்களைவிடுத்து அம் மக்களுக்கு நியாயம் கிடைக்க வழி செய்யவேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார். (இ-4-9)



# குறைகேள் அரங்கு...

## யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் பிரச்சினை பீடாதிபதிகளின் பாதங்களுக்கு சமர்ப்பணம்

அன்பார்ந்த அந்தண, சைவ பீடாதிபதிகளே, குருமார்களே வணக்கம்.

வருடப்பிறப்பு, தீபாவளி முதலான சமூகத்தில் சந்தோசம் நிலவுகின்ற போது உங்கள் ஆசியுரை அருள் உரை ஊடாக காணக்கூடியதாக இருக்கின்றது.

வடபகுதியில் அவ்வப்போது பல அசம்பாவிதங்கள், துஷ் பிரயோகங்கள் முதலானவைகள் நடைபெற்ற போதெல்லாம் தங்களை காண முடிவதில்லை. உடனே மௌன விரதம் இருந்து விடுகின்றீர்கள்.

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் பல சந்தர்ப்பங்களில் கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

ஆனால் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் பிரச்சினையில் அதுவும் மௌனம் காப்பது வேதனை தருகின்றது. எனக்கு தெரிந்த நண்பர் ஒருவரின் செயற்பாடு ஞாபகம் வருகின்றது.

ஊர்முழுக்க கடன் பெற்றார். கடனாளிகள் வீட்டுக் கதவு தட்டும் போது அவருடைய மனைவி அவர் இன்று மௌன விரதம் யாருடனும் கதைக்கமாட்டார் என கூறி அனுப்பிவிடுவார்.

இது இன்று குருமார்களுக்கு பொருத்தமாக உள்ளது. பிரச்சினை என்றவுடன் பீடாதிபதிகள் மௌன விரதம் போலும், சமூகப் பிரச்சினைகளுக்கு பங்கு கொடுக்க முற்படாது விட்டாலும் கூட தமது குருத்துவம் சார்ந்த தமது குருமார் சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் கூட கருத்துக்கூற முடியாதவர்களாக இருப்பார்களேயானால் இவர்களது பணிகள்தான் என்ன?

வெறுமனே கும்பாபிஷேகம், கொடியேற்றம், பண்டிகைகளுக்கு மாத்திரம் ஆசி வழங்குவதில் அர்த்தம் இல்லை.

இது சமயப்பணியாக ஏற்கவும் முடியாது. ஒருசில குருபீடங்கள், தனியார் அந்தண அமைப்புக்கள் பல சமய சமூகப்பணிகளை ஆற்றி வருகின்ற போதும் பீடாதிபதிகள் தொடர்ந்து அமைதி பேணுவது விநோதமாக உள்ளது. குருமார் ஒன்றியம் இவ்விடயத்தில் அக்கறையற்று இருக்கின்றதா? பெருமாள் கோவில் பிரச்சினை பீடாதிபதிகளின் பாதங்களுக்கு சமர்ப்பணம்.

சிவனடியான்,
யாழ்ப்பாணம்.


# 26வது வீரமக்கள் தினம்

**13.07.2015-16.07.2015**



அமரர்.அ.அமிர்தலிங்கம்
செயலாளர் நாயகம் - தமிழர் விடுதலைக் கூட்டணி





அமரர்.தோழர்.க.உமாமகேசுவரன்
செயலதிபர் - புளொட்

## உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைவோம்!!!

விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஈந்த கழகக் கண்மணிகள், போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.

குறிப்பு: 16.07.2015 அன்று மாலை 4.00 மணிக்கு வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேசுவரன் நினைவு இல்லத்தில் மலரஞ்சலி நிகழ்வு இடம்பெறும். (1128)

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இராமநாதன் ஞானக்குழந்தை இல்லத்தின் 22 ஆவது வருடாந்த விளையாட்டு நிகழ்வு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும் ஆறுதல் நிறுவன நிபுணத்துவ ஆலோசகருமான சி.மாதவகுமாரன் உட்பட விருந்தினர்கள சிறார்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வின் ஒருபகுதியையும் வெற்றியீட்டிய மாணவர்கள் வெற்றிக்கிண்ணங்களுடன் ஆசிரியர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.





யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியர்கள் மற்றும் உயர் தொழில் வாண்மையர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய மனிதம் அமைப்பு ஏற்பாடு செய்த பண்பாட்டு விழுமியங்களுடனான வாழ்வுக்கான பிரார்த்தனை நிகழ்வு அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது சின்மயா மிஷனின் பஜனை, செயற்திறன் அரங்க இயக்கம் வழங்கிய சக்தி கொடு நாடகம்,விரிவுரையாளர் எஸ்.கோபிதாசின் வயலின் இசைக்கச்சேரி என்பன இடம்பெற்றன.





அமரர் சின்னக்குட்டியன் பசுவதி ஞாபகார்த்த நிதியத்தின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கா.கணபதிப்பிள்ளை மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறைத்தலைவர் இ.இரட்ணம் உரையாற்றுவதனையும் கடந்த வருடம்- க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் ஒருவருக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் நிதி வழங்குவதனையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-நல்லூர் செய்தியாளர்)





வலி. மேற்கு பிரதேசத்தில் சர்வதேச சுற்றாடல் தினம் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. பிரதேச ரீதியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு பாடசாலை மாணவரிடையே போட்டிகள் நிகழ்த்தப்பட்டு வெற்றி பெற்ற 200இற்கும் அதிகமான மாணவர்களுக்கு சான்றிதழ்கள்,பரிசில்கள் மற்றும் பயன்தரு மரக்கன்றுகள் என்பன வழங்கப்பட்டபோது.....






நல்லூர் ரோட்டறி கழகத்தின் 3 ஆவது பதவியேற்பு நிகழ்வு அண்மையில் டில்கோ ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கொழும்பு கிழக்கு ரோட்டறி கழகத்தின் முன்னாள் தலைவர் கபிலன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறிமோகன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் முன்னாள் மாவட்ட ஆளுநர் கௌரி ராஜன் முன்னிலையில் 2015/16 இற்கான தலைவராக பதவியேற்ற ஜனார்த்தன் முன்னாள் தலைவர் ரவினதாசிடம் இருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கடல் வளத்தை பாதுகாப்பதற்கு தவறின் கடல் மட்டம் உயரும் அபாயம்

## வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

**எமது கடல்வளத்தையும சமுத்திரத்தையும் சிறந்த முறையில் பாதுகாக்க தவறினால் 2100 ஆம் ஆண்டு 6 அடி 6 அங்குலம் அளவு கடல் மட்டம் உயர்வடையும் அபாயம் உள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகளின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரின் அமெரிக்க விஜயம் தொடர்பான பயன்கள் குறித்து வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்தியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடல் வளத்தை பாதுகாப்பது, அபிவிருத்தி செய்வது தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்தினால் 16 நாடுகளிலும் இருந்து தலா ஒருவர் வீதம் அழைக்கப்பட்டு மூன்று வாரகால கருத்தரங்கு நடைபெற்றது.

கடல் வளத்தை பாதுகாப்பதில் ஒரு நாடு மட்டும் முயற்சி செய்தால் போதாது. அனைத்து நாடுகளும் இணைந்து முயற்சி செய்ய வேண்டும் என்பதுதான் இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாக இருந்தது.

கடல் வளப் பாதுகாப்பது மட்டுமல்லாது மீன்பிடித்துறையினை எவ்வாறு விருத்தி செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் அத்துடன் அமெரிக்க அரசாங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கின்றன என்பது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் அமெரிக்காவில் மத்திய மாகாண அரசுக்கிடையில் நல்லதொரு உறவு காணப்படுகின்றது.

அங்குள்ள 50 மாகாணங்களிலும் கடல் எல்லையில் இருந்து 3 மைல் தூரம் வரை அந்தந்த மாகாணங்களுக்கு இடம் மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தமக்குரிய எல்லைக்குள் மீன்பிடி கடல் வளத்தை பாதுகாத்தல், வரிகளை பெற்றுக் கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

எனவே அங்கு மத்திய, மாகாண அரசுக்கிடையே சுமுகமான சிறந்ததொரு உறவு இருந்து வருகின்றது.

அவ்வாறு செயற்பட்டதன் காரணமாக அவர்கள் அபிவிருத்தியில் உச்ச நிலையை அடைந்துள்ளார்கள்.

இவ்வாறான நடைமுறைகளை எமது நாட்டில் பின்பற்றினால் எமது இனப்பிரச்சினைக்கும் சுமுகமான தீர்வு விரைவில் கிடைப்பதோடு எமது மாகாணத்தில் அபிவிருத்தியையும் மேற்கொள்ள முடியும்.

அதன் அடிப்படையில் மத்திய அரசிடம் எமது மாகாணத்திற்கென கடல் எல்லையில் இருந்து 3 கடல்மைல் தூரம் ஒதுக்கப்பட வேண்டும் என கோரவுள்ளேன்.

அதன் ஊடாக சட்டங்களை இயற்றி பல்வேறு திட்டங்களை செயற்படுத்தவும் எமது மீன்பிடித்துறையில் பல்வேறு முன்னேற்றங்களை கொண்டுவரவும் முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# போக்குவரத்து வசதி இன்மையால் தேவைகளை பூர்த்தி செய்வதில் தாமதம்

## மலையாளபுரம் கிராமமக்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மலையாளபுரம் கிராம மக்கள் தமக்கான போக்குவரத்து வசதி இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,


கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சென்று வருவதற்கும் வெளிமாவட்ட தேவையின் நிமிர்த்தம் போக்குவரத்து செய்வதற்கும் உதவித்தொகை பணத்தை பெறுவதற்கு தபாலகத்திற்கு செல்வதற்கும் சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரத்திற்குசெல்லவேண்டிய நிலை உள்ளதாகவும் அவர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதியில் இருந்து அறிவியல் நகர் முதியோர் இல்ல வீதியூடாக போக்குவரத்து சேவையை நடத்தினால் தமக்கான பிரயாணங்களுக்கும் பலதரப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கும் இலகுவாக இருக்குமென இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள்,தனியார் இ.போ. சபையினர் ஆகியோர் கூடிய கவனமெடுத்து மிக விரைவில் தமக்கான பேருந்து சேவையை ஏற்படுத்தி தர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-254)




# பயிற்சியை நிறைவு செய்த யுவதிகளுக்கு உபகரணங்கள்




(தர்மபுரம்)

எஸ்.ரி.சோலிடட்டி பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 3 மாத கால அழகுக் கலை பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு தருமபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இந்நிறுவனத் திட்டப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

அத்துடன்பயிற்சியைநிறைவு செய்த யுவதிகளுக்கு இது தொடர்பான உபகரணங்களும் வழங்கப்பட் டன. (2-282)

# வீடொன்றினுள் திருட முற்பட்ட இளைஞன் கஞ்சா பொதியுடன் மடக்கி பிடிக்கப்பட்டான்



கிளிநொச்சி இரணைமடு சந்தியை அண்மித்த பாரதிபுரம் பகுதியில் பகல் வேளையில் வீடொன்றினுள் திருட முற்பட்ட இளைஞன் கஞ்சா பொதியுடன் பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று முற்பகல 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்து திருட முற்பட்ட வேளையில், வீட்டு உரிமையாளர்கள் குறித்த சந்தேகநபரை அவதானித்ததுடன் கூக்குரலிட்டு அயலவர்களின் உதவியை நாடியுள்ளனர். குறித்த சந்தேக நபர் வீட்டின் கூரையின் ஓட்டினை கழற்றி உள் நுளைந்த வேளை வீட்டு உரிமையாளர்கள் வழமை போல் வீட்டினை திறந்து சென்றுள்ளனர்.

அப்போது வீட்டில் பதுங்கியிருந்த குறித்த சந்தேக நபர் வீட்டு உரிமையாளரின் கழுத்தை நெரிக்க முற்பட்ட போது வீட்டு உரிமையாளரான பெண் கூக்குரலிட்டுள்ளார்.

அதன் பின்னர் குறித்த சந்தேக நபர் தப்பி செல்ல முற்பட்ட வேளை அயலவர்களின் உதவியுடன் பிடிக்கப்பட்டு, கட்டி வைத்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இதேவேளை மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர் குறிப்பிடுகையில், குறித்த கஞ்சா பொதியை இராணுவ அதிகாரி ஒருவருக்கே வாங்கி செல்வதாகவும்,

அதற்கு பணம் ஏதும் வழங்கப்படுவதில்லை என்றும் பதிலாக இறைச்சி வகைகளை தமக்கு தருவதாகவும் குறிப்பிட்டார் குறித்த கஞ்சாவை ஆயிரத்து 500 ரூபாவுக்கு தாம் பெற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கஞ்சா பொருளுடன் சந்தேகநபர் பொது மக்களால் பிடிக்கப்பட்டதை அறிந்த கிளிநொச்சி முல்லைத்தீவு மதுவரி திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பிரஸ்தாப நபரை அழைத்து செல்ல முற்பட்ட போது, அங்கு கூடியிருந்த பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். குறித்த சந்தேகநபர் போதைப்பொருளுடன் பிடிபட்ட போதிலும் அவருக்கு எதிராக கொலைமுயற்சி, களவெடுக்க முற்பட்டமை ஆகிய மேலும் முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

குறித்த நபரை பொலிஸாரிடம் கையளிப்பதே பொருத்தமானது என்றும் மக்கள் குறிப்பிட்டு பொலிஸாருக்கு தகவலை வழங்கி கையளித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் சந்தேகநபரையும், மீட்கப்பட்ட கஞ்சா பொருளையும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர.

சம்பவம் தொடர்பில் வீட்டுரிமையாளர்களின் முறைப்பாட்டினை அடுத்து விசாரணைகளை ஆரம்பித்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (2-281)

# பனை அபிவிருத்தி வாரம் 22 - 28 வரை பிரகடனம்

## மாணவர்களும் கடைப்பிடிக்க ஏற்பாடு

(மல்லாவி)

வடக்கு மாகாண பனை அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற அனைத்து பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களிடையே பனை அபிவிருத்தி வாரத்தை கொண்டாடும் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் (கல்வி) சீ.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில அவர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் எதிர்வரும் 22 ஆம்திகதி புதன் கிழமை தொடக்கம் 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரையிலான ஒருவார காலப்பகுதி வடக்கு மாகாண பனை அபிவிருத்தி வாரமாக பிரகடனப்படுததப்பட்டுள்ளது.

எனவே வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் பனை அபிவிருத்தி வாரத்தினை கடைப்பிடிப்பதுடன் பனை வளம் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ள அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு அவர் அனைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (2-15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1189

## அரசனுக்கு உதவி புரிந்த உத்தமி



...அதற்குள் வந்து தன்னைப் பார்க்கவில்லையானால்தன்உயிரை இழந்துவிடப் போவதாகவும் உறுதி பூண்டு அன்றுமுதல் விரதம் இருக்கத் தொடங்கினாள். மேலும் முன்பு செய்ததைக் காட்டிலும் அதிகளவில் தான தருமம் செய்யலானாள்.

தன் காதலன் பாடலி புத்திரத்தின் அரசன் விக்கிரமாதித்தன் என்பது மதனமாலாவுக்கு தெரியாது.

மதனமாலா ஒருநாள் யாசித்து வந்த ஒருவனுக்கு அந்தத் தங்கப் பதுமையின் கையை உடைத்து வழங்கினாள்.

மறுநாள் தங்கப் பதுமையின் சிதைந்த கை மீண்டும் வளர்ந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தாள் மதனமாலா.

எனவே நாள்தோறும் தங்கப் பதுமையின் உறுப்புகளை உடைத்து வருகிறவர்களுக்கெல்லாம் தானம் வழங்கிக் கொண்டிருந்தாள்.

நாட்கள் ஓடின மதனமாலாவின் தர்மம் நாடு முழுவதும் பரவியது; இதர நகரங்களிலிருந்தும் பலர் வந்தனர்.

தத்தன் என்ற புலவர் மதனமாலாவின் வள்ளன்மையை அறிந்து பாடலிபுத்திரத்திலிருந்து வந்தார். காவியங்களையும் நீதி நூல்களையும் மதனமாலா ரசிக்கும்படி விளக்கிக் கூறினார்.

பாடல்களைக் கேட்டுக் கழித்த மதனமாலா தங்கப் பதுமைகளையும் கைகளையும் வேறு சில உயர்வான பொருட்களையும் புலவருக்கு வழங்கிக் கௌரவித்தாள்.

புலவர் அங்கிருந்த வேலையாட்களிடம் மதனமாலாவின் கவலையையும் விரதமிருப்பதன் காரணத்தையும் விசாரித்தான்.

அவர்கள் எல்லாவற்றையும் விவரமாக புலவரிடம் கூறினார்கள்.

தனக்கு கிடைத்த பரிசுப் பொருட்களைஒருஒட்டகத்தில்ஏற்றிக்கொண்டு புலவர் பாடலிபுத்திரம் சென்றார்.

தனக்கு கிடைத்த தங்கம் முதலான பொருட்களை விக்கிரமாதித்த அரசனிடம் கொடுத்து வைப்பதே பாதுகாப்பு என்று எண்ணினார் புலவர்.

அரண்மனைக்குச் சென்று அரசனைப் பார்த்து தான் பிரதிட்டானத்தில் மதனமாலாவிடம் பெற்ற பரிசுப் பொருட்களையும் தங்கப் பதுமையின் கைகளையும் ஒப்படைத்து தனக்குத் தேவையானபோது பெற்றுக் கொள்வதாகச் சொன்னார் புலவர்.

மேலும் அரசே! அத்தகைய தரும குணம் கொண்ட தாசி மதனமாலாவைப் போன்றவளை எந்த நாட்டிலும் காண இயலாது.

யாரோ ஒரு காதலன் அவனிடம் அவள் உயிரையே வைத்திருக்கிறாள் அவன் ஐந்து தங்கப் பதுமைகளை வைத்துவிட்டு, சொல்லாமல் ஓடிவிட்டான்.

அவன் நினைவாக விரதம் மேற்கொண்டிருக்கிறாள். அவன் ஆறு மாதத்திற்குள் மீண்டும் வரவில்லை என்றால் தன் உயிரைத் துறக்க உறுதி பூண்டு தினமும் வருகிறவர்களுக்குத் தாராளமாகத் தான தருமம் செய்து வருகிறாள். பாவம்! அவளுக்கு இப்படி ஒரு துயரம் வரக்கூடாது என்று கூறிவிட்டு புலவர் புறப்பட்டுச் சென்றார்.

அதைக் கேட்டதும் விக்கிரமாதித்தன் மனம் தடுமாறினான்.

மதனமாலாவைக் கொண்டே தன் பகைவனை வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் கருதி உடனே பிரதிட்டானுக்குப் புறப்பட்டான். எதிர்பாராமல் விக்கிரமாதித்தனைக் கண்டதும் மதனமாலா மெய் மறந்து அசைவற்று நின்றுவிட்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு நீ விரதம் மேற்கொண்டு எத்தனை நாட்களாயின? என்று பேச்சைத் தொடங்கினான். உங்களுக்கு என்ன குறை? நான் என்ன குற்றம் செய்துவிட்டேன். ஏன் என்னைத் தவிக்க விட்டுப் பிரிந்து சென்றீர் என்று கோபமாகக் கேட்டாள்.

விக்கிரமாதித்தன் தான் யார் என்றும் என்ன நோக்கத்துக்காக இங்கே வந்தேன் என்பதையும் அவளிடம் விவரமாக கூறினான்.

மேலும் அரசன் நரசிங்கனைப் போரில் வெல்ல இயலாது. அவனை மானபங்கப்படுத்த நீதான் உதவி புரிய வேண்டும்? என்று அன்பு தவழக் கனிவோடு கேட்டுக் கொண்டான்.

அவனுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தாள் மதனமாலா.

ஆகையால் நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்று ஆர்வத்தோடு கேட்டாள் மதனமாலா.

இந்த நாட்டு மன்னனின் நரசிங்கன் உன் மாளிகைக்கு வரும்போது காவலர்கள் அவனை வாசலிலேயே தடுத்து நிறுத்தி விட வேண்டும் .

உள்ளே இருப்பது யார் என்று கேட்டால் என் பெயரைச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்தால் ஏற்கனவே நான் செய்த சபதம் நிறை வேறிவிடும் என்றான்.

அவளும் அப்படியே செய்வதாகக் கூறி காவலர்களை அழைத்துக் கட்டளையிட்டாள்.

மதனமாலா செய்யும் தான தருமங்களையும் அவளுக்கும் கிடைத்திருக்கும் அதிசயமான தங்கப் பதுமைகளையும் கேள்விப்பட்ட அரசன் நரசிங்கன் மதனமாலாவின் மாளிகைக்கு வந்தான். காவலர்கள் அவனை உள்ளே அனுமதிக்காமல் வாசலிலேயே நிறுத்திவிட்டனர். அரசனுக்குக் கோபம் வந்தது.

மாளிகை உள்ளே பார்த்து மன்னர் நரசிங்கர் வாசலிலே வந்து காத்து நிக்கிறார் என்று உரக்க கூறினார்கள் காவலர்கள்.

உடனே விக்கிரமாதித்தனும் சிரித்துக் கொண்டே மாளிகையிலிருந்து வெளியே வந்தான்..

அவனைப் பார்த்ததும் நரசிங்கன் வியப்படைந்தான். இந்த விக்கிரமாதித்தன் எப்படியோ நம் நாட்டுக் குள்ளேயே வந்து அவன் சபதம் செய்தபடி நம்மையும் வாசலில் காத்திருக்கச் செய்துவிட்டானே? இனிமேல் எதற்காக பகைவர்களாக இருக்கவேண்டும்? என்று நினைத்தான்.

அவன் தன் கருத்தைக் கூறியதும் விக்கிரமாதித்தனும் அதை ஏற்றுக்கொண்டு பகைமை மாறி இருவருக்கும் நட்புறவு மலர்ந்தது.

பிறகு உத்தம குணம் வாய்ந்த மதனமாலாவைஅழைத்துக்கொண்டு விக்கிரமாதித்தன் பாடலிபுத்திரம் சென்று அவளுடன் இன்பமாக வாழலானான். -முற்றும்-



## 07.2015 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 622 - முகமது நபி மக்காவிலிருந்து மதீனாவுக்கு பயணம் தொடங்கினார். இது இஸ்லாமிய நாட்காட்டியின் தொடக்கமாகும்.
- 1661 - ஐரோப்பாவின் முதலாவது வங்கித்தாள் (bank note) சுவீடனில் வெளியிடப்பட்டது.
- 1769 - சான்டியேகோ நகரம் அமைக்கப்பட்டது.
- 1930 - எதியோப்பியாவின் முதலாவது அரசியலமைப்பை அதன் மன்னர் ஹைல் செலாசி வெளியிட்டார்.
- 1942 - பிரெஞ்சு அரசு நாட்டில் உள்ள அனைத்து 13,000-20,000 யூதர்களையும் சுற்றி வளைத்துக் கைது செய்ய காவற்துறையினருக்கு உத்தரவிட்டது.
- 1945 - மான்ஹட்டன் திட்டம்: முதலாவது அணுகுண்டு சோதனையை ஐக்கிய அமெரிக்கா நியூ மெக்சிகோ அலமொகோத்ரோவுக்கு அருகில் உள்ள பாலைவனத்தில் வெற்றிகரமாகச் சோதித்தது.
- 1948 - இயேசு கிறிஸ்து வாழ்ந்த நசரெத் நகரத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது.
- 1950 - உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உருகுவாய் பிரேசிலை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.
- 1955 - டிஸ்னிலாந்து பூங்கா கலிபோர்னியாவில் அமைக்கப்பட்டது.
- 1965 - பிரான்சையும் இத்தாலியையும் இணைக்கும் மோண்ட் பிளாங்க் சுரங்கப் பாதை திறக்கப்பட்டது.
- 1969 - அப்பல்லோ 11 புளோரிடாவிலிருந்து ஏவப்பட்டது. இதுவே சந்திரனில் இறங்கவிருக் கும் முதலாவது மனிதரை ஏற்றிச் சென்ற விண்கலம் ஆகும்.
- 1979 - ஈராக் ஜனாதிபதி ஹசன் அல்-பாக்ர் பதவியைத் துறந்ததை அடுத்து சதாம் உசேன் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.
- 1989 - புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1994 - ருவாண்டாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1994 - "ஷூமேக்கர்-லெவி 9" என்ற வால்வெள்ளி வியாழனுடன் மோதியது.
- 2004 - தமிழ்நாடு கும்பகோணத்தில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 94 பிள்ளைகள் தீயிற் கருகி மாண்டனர்.
- 2004 - மிலேனியம் பூங்கா சிக்காகோவில் அமைக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1896 - ட்றிகுவே லீ, ஐக்கிய நாடுகள் அவையின் முதலாவது பொதுச்செயலாளர் (இ. 1968)
- 1942 - முவம்மார் அல் கடாபி, லிபியாவின் தலைவர்
- 1968 - தன்ராஜ் பிள்ளை, இந்திய ஹாக்கி வீரர்.

### இறப்புகள்


- 1989 - உமாமகேஸ்வரன், புளொட் அமைப்பின் தலைவர்
- 2009 - டி. கே. பட்டம்மாள், கர்நாடக இசைப் பாடகி (பி. 1919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 240

## அஹங்காரத்தை விடுதல்



...அது ஒரு தவறான கருத்தாகும். கடுமைத்தனம் ஒருபோதும் மதமாகவோ ஆன்மீகமாகவோ முடியாது.

நான் ஏன் நிறைய நகைச்சுவைகளும் சின்னச் சின்னக் கதைகளும் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறீர்கள்? இவற்றையெல்லாம் சொல்லவில்லையென்றால் நீங்கள் மிகவும் கடுமையாகிவிட ஆரம்பித்துவிடுவீர்கள். கடுமையாகும்பொழுது உயிரற்றும் கனத்தும் போய்விடுகிறீர்கள். நீங்கள் உயிர்ப்புடனும் இலேசாகவும் இருப்பதில்லை. நான் உங்களை கனமாக்குவதற்காக இங்கு வரவில்லை.

உங்கள் சுமையைக் குறைத்து, இலேசாக்கவே வந்திருக்கிறேன். கடுமைத்தனம், உங்கள் அஹங்காரத்தின் ஒரு வடிவத்தைத் தவிர வேறல்ல என்பதைக் காட்டவே, வந்திருக்கிறேன். நீங்கள் எது இல்லையோ, அதைக் காட்டவே நான் வந்திருக்கிறேன். நீங்கள் உங்களைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதை பலப்படுத்துவதற்காக நான் இங்கு வரவில்லை.

இறந்தகாலத்தாலும், எதிர்காலத்தாலும் சுமையேற்றப்பட்டிருப்பவர்களே எப்பொழுதும் கடுமையாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தன்னிச்சையாக சிரிப்பது எவ்வாறு என்பது கூடத் தெரியாது. அவர்கள் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் தோளில் சுமப்பது தங்கள் கடமை என்றெண்ணி, அதிலேயே கடுமைத் தனத்துடன் ஆழ்ந்து விடுகிறார்கள். இது மிகவும் அஹங்காரம் நிறைந்த ஒரு மனோபாவம். அவர்கள் அதைச் செய்யவில்லை என்றால், அவர்களுக்காக அதைச் செய்வதற்கு யாருமில்லை என்று எண்ணுகிறார்கள்.

முதலில் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் தோளில் சுமந்து திரிய வேண்டிய அவசியம் இல்லை. வெறுமனே நிகழ்காலத்தில் இருப்பதே போதுமானது. அவர்கள் நிகழ்காலத்தை முழுவதுமாகத் தவறவிட்டுவிடுகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் சிரிப்பையும் முழுவதுமாகத் தவற விட்டுவிடுகிறார்கள்.

சிரிப்பு என்பது உங்கள் இருப்புத் தன்மையில் இருந்து உடலுக்கு சக்திக் கதிரைக் கொண்டுவருவது. இது உங்கள் முழு இருப்பையும் முழுவதுமாக புத்துயிர் பெறச்செய்கிறது. அதனால், வேறு எதனாலும் முடியாத அளவிற்குக் குணப்படுத்தமுடியும். அதனால், நீங்கள் மற்ற கடினமான தியான முறைகளின் மூலம் அடைய முயற்சி செய்யும் அற்புதமான நிகழ்கால தரிசனத்தை அளிக்க முடியும். சிரிப்பு ஒரு மிகவும் சக்திவாய்ந்த தியான முறையாகும்.

சிரிப்பு என்பது ஒரு மிக உயர்ந்த ஆன்மீகத் தன்மையாகும். எப்பொழுதும் சிரத்தையும் சிரிப்பும் ஒன்றாகவே இணைந்து செல்லும்.

நான் முன்பே சொன்னதுபோல், கடுமைத்தனத்தால் ஒருபோதும் சிரிப்புடன் ஒன்றாக இணைந்து இருக்க முடியாது.

நீங்கள் கடுமையாக இருக்கலாம் அல்லது சிரிப்புடன் இருக்கலாம். நீங்கள் சிரத்தையுடன் இருக்கும் பொழுது சிரித்துக் கொண்டே உங்கள் கடமையைச் சிரத்தையுடன் செய்ய முடியும்.


நம்மில் எத்தனை பேரால் முழுமையாக இதயம் திறந்து சிரிக்க முடியும்?

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# கருவாச்சி காவியம்

வைரமுத்து–189



...சத்தில்லாத நாய்க ரெண்டு குலைக்கத் தெரியாமக் கொலச்சுக்கிட்டே வண்டியத் தொடுத்துப் போச்சுக. அப்பறம் படுத்துக்கிருச்சுக பாதியிலயே.

திம்சு மட்டும்தான் போனாளா.. கட்டையனையும் கையோட கூட்டிட்டுப் போயிட்டாளா?

நீ வேற.... கொரங்க மடியில கட்டிக்கிட்டா அவ கூத்துப் பாக்கப் போவா? இத்தமொறம், பிஞ்ச பிரம்புக்கூடை, கட்டையன் இந்த மூண மட்டும் வீட்ல விட்டுட்டு வெளியேறிட்டப்பா.

பின்னத்தேவன்பட்டி அருவா மூக்கனுக்கு வீட்ட வித்துப்புட்டாளே!

வெள்ளிக்கிழமைக்குள்ள வெளியேறிக்கன்னு கெடு வச்சிட்டாளாணாம் அந்தக் கெட்ட சாதிப்பய. அப்பவும் வெளிய வராம உள்ளயே கெடந்திருக்கான் கட்டையன்.

அருவா மூக்குல கதவுல கொத்திக் கொத்திச் சொல்லிட்டுப்போயிட்டானாம் வெளியேறிக்க வெள்ளிக் கெழமைன்னு.

காலம் பண்ற கூத்தப் பாத்தியாப்பா. அப்பனும் செத்துப் போனான்; சொந்தபந்தம் இல்ல. சுத்தி ஒரு நாதி இல்ல. கட்னவள விட்டுட்டான்; கட்னவ விட்டுட்டா; பொழப்பு சிக்கலாப் போச்சு; உடம்பு சீக்காப் போச்சு. நம்ப வச்சுக் கழுத்தறுத்திட்டுப் போயிட்டாளேப்பா ஒரு கசவாடச் சிறுக்கி.

தங்கம்ன்னு ஊரையே நம்ப வச்சு இளிச்சிட்டுப் போயிருச்சே ஈயம், கடைசியில கட்டையன அனாதியாக்கிருச்சே காலம்.

ஊர்ல பட்டினியாக் கெடக்கு பாதி சனம். மாடுகள வித்துத் தின்னாச்சு. ஆடுகள அடிச்சுத் தின்னாச்சு.



நடக்க மாட்டாத கெழவன்களும் கண்ணு தெரியாத கெழவிகளும் இப்பவோ பெறகோன்னு இழுக்க ஆரம்பிச்சிருக்கு[illegible]

பசுமாட்[illegible] கூட கருவாச்சி ஊருக்குக் கஞ்சி ஊத்திப் பாத்தா.

சுட்ட பாறை மேல விழுந்த சொட்டுத் தண்ணி மாதிரி அது ஒண்ணுக்கும் ஆகல.

[illegible] முடிஞ்சுவச்ச கல்லுப் [illegible]ட்டாம்பயறும் காப்படி அரைக்காப்படி இருந்துச்சு வீட்ல. அரைப்படி சோள அரிசி இருந்தாப் போதும்.

மூணையும் ஒண்ணாப் போட்டுக்காய்ச்சிக் கஞ்சித தண்ணிய மட்டும் எடுத்துக் குடிச்சுக்கிட்டேயிருந்தா ஒரு வாரத்துக்கு ஊறவச்சுக்கிரலாம் உசுர.

எங்க போறது சோள அரிசிக்கு?

எ... எ... எலிப் பொந்து எதாச்சும் தோ.. தோ.. தோண்டி தா... தா... தானியமிருந்தாக் கொண்டரேன்.

கடப்பாரை கையில புடிச்சு, மம்பட்டியையும் தோள்ல போட்டுக் கெளம்பிட்டான் கொண்ணவாயன்.

தோள்ல போட்ட மம்பட்டி முதுகுல ஒக்காராமக் கூன்ல ஒரு ஓரமா இடிச்சு இடிச்சு இம்ச பண்ணிக்கிட்டே போகுது.

எலியும் எறும்பும் மழைக் காலத்துக்குச் சேத்துவச்ச இருங்கச் சோளம், வரகு, விருவிட்டான்பயறு ரெண்டு மூணு வருசத்துக்கு ஒண்ணும் ஆகாது. மனுசன் வெதச்சதக் களவாண்டுட்டுப் போயி எலி தின்னப் பாக்குது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தையன்கட்டு குளத்தின் புனரமைப்புப்பணி ஆரம்பம்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்ட பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றான முத்தையன்கட்டு குளத்தின் புனரமைப்பு பணிகள் 600 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பாரிய நீர்ப்பாசனக்குளமான முத்தையன் கட்டுக்குளம் மிக நீண்டகாலமாக புனரமைக் கப்படாமல் அதன் அணைக்கட்டு, நீர்விநி யோக வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால் கள் மிக மோசமாக சேதமடைந்து காணப் பட்டன.

1966ஆம் ஆண்டின் மீள் கட்டமைக் கப்பட்ட குடியேற்ற திட்டத்தின் கீழ் காணப்ப டும் இக்குளமானது 4ஆயிரத்து150 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பரவல் நீர்ப்பாசனமும் ஆயிரத்து 962 ஏக்கர் நிலப்பரப்பிற்கு ஏற்று நீர்ப்பாசனமும் மேற்கொள்ளப்படும் ஓர் குள மாக காணப்பட்டது. அத்துடன் உப உணவு உற்பத்தியை ஊக்குவிக்கின்ற ஒரு பிரதேச த்தை தன்னகத்தே கொண்டு காணப்பட் டது.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எந்தப்புனரமைப்புமின்றி காணப்பட்ட குளத் தின் அணைக்கட்டு நீர்விநியோக வாய்க் கால்கள், பாலங்கள் என்பன புனரமைக் கப்படுவதுடன் இதனுடைய வான் பகுதி இரண்டு அடிக்கு உயர்த்தப்பட்டு எதிர்கால த்தில் மேலதிக நீரைத் தேக்கி ஏற்கனவே செய்கை பண்ணப்படுகின்ற நிலப்பரப்பிற்கு மேலதிகமாக 2ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசனம் செய்கை செய்யக்கூடிய வகையில் இக்குளம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சின் கீழ் உள்ள அணைப்பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் இந்தக்குளத்தின் புனரமைப்பு பணிகள் 600 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள் ளப்படவுள்ளன. (2)








கிளிநொச்சி மாவட்ட சர்வமத சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகள் ஆகியோருக்கு மதங்களுக்கிடையிலான சமாதானத்தையும் நல்லுறவையும் பேணுவதற்கான. இரு நாட்கள் கொண்ட பயிற்சிப்பட்டறையொன்று கடந்த 11,12 ஆம் திகதிகளில் கிளி/நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் நடைபெற்ற போது...

(படங்கள்:-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

## பாதிக்கப்பட்ட சிறுபான்மையினருக்கு உரிமைகள் கிடைக்கப் பெறவேண்டும்

### முன்னாள் எம்.பி.முத்தலிப் பாபா பாரூக் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தங் களை செய்தே இணைந்துள்ளோம் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பியும் வன்னி மாவட்ட வேட்பாளருமான முத்தலிப் பாபா பாரூக் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுவை கையளித்த பின்னர் ஊட கங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வன்னி மாவட்டத்தில் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுகின்றது. அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்திலும் தனிமையாக போட்டியிடுகின்றோம்.

அத்துடன் ஏனைய மாவட்டங்களில் நல்ல அரசாங்கத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிடுகின்றோம்.

கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட தேசிய ரீதியிலான இன முறுகல் மற்றும் சிறு பான்மையினர் பாதிக்கப்பட்டமை மற்றும் உரிமைகள் மறுக்கப்பட்டமைக்கு எதிரா கவும் சிறுபான்மையினருக்கு இந்த அர சாங்கத்தில் உரிமைகள் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும் எங்களது தேர்தல் விஞ் ஞாபனத்தை முன்வைத்து இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் எமது கட்சி ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்பும் நாங்கள் சேர்வதற்கான நிபந்த னைகளை வைத்துள்ளோம்.

முஸ்லிம்களை பிரதிநிதிப்படுத்தும் கட்சியாக நாம் இருந்த போதிலும் வடக்கு, கிழக்கு மற்றும் அவை தவிர்ந்த பிரதேச ங்களில் அவர்களின் அரசியல் அபிலா ஷைகள் சரியான முறையில் வழங்கப் படவேண்டும் என்ற ரீதியில் நாம் சேர்ந் திருக்கின்றோம். (2-250)

## சிறந்த வடிகாலமைப்பின்மை; கழிவுநீர் தேங்கி துர்நாற்றம்

### பொதுமக்கள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி நகரில் சரியான வடிகா லமைப்பின்மை மற்றும் கழிவு நீர்தேங்கு வதனால் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய் பரவும் நிலை காணப்படுகின்றது. கிளிநொச்சி நகரின் பொலிஸ் நிலையம், பொது விளையாட்டு மைதானம், பழைய மாவட்டச்செயலகம் ஆகியவற்றை அண் மித்த பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கொங்கீறீட் கழிவு வாய்க்கால்களில் கழிவு நீர் மாதக்கணக்கில் தேங்கி காணப்படு வதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

இவற்றை வடிந்தோடக்கூடிய வகையில் வடிகாலமைப்புக்களை ஏற்படுத்தவோ அல்லது இவற்றை சுத்திகரிப்பதற்கோ உரிய அதி காரிகள் எந்தவிதமான நடவடிக்கைகளையும எடுக்கவில்லை என பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். குறித்த பகுதிகளில் உண வகங்கள், பொலிஸ் நிலையம் ஆகியவற்றி லிருந்து வெளியேறும் கழிவு நீர் நீண்டநாட் களுக்கு தேங்கி துர்நாற்றம் வீசுகின்றன.

ஆகவே பருவமழை காலங்களில் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாயநிலை காணப் படுவதனால் இவற்றை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் சம்பந்தமாக அரசியல் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட் டோருக்கு பிரதேசவாசிகள் தெரியப்படுத்தியுள்ள போதும் தற்போதுவரை இவ் விடயம் தொட ர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படாமல் இருப்பது கவலையளிப்பதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின் றனர். (2)

## ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா

(கிளிநொச்சி)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகம் நடத்தும் ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணிக்கு பிரதேச செயலக மாநா ட்டு மண்டபத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் நடைபெறும்.

இதன்போது வில்லிசை, ஆடிக்கூழ், கொழுக் கட்டை பரிமாறல், சிறப்புப்பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (2)

## போரில் துவண்டுள்ள மக்களுக்கு சாமர்த்திய நகர்வே தேவையாகும்

### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

போரினால் துவண்டுபோயுள்ள மக்களுக் கான அபிவிருத்தியையும், அரசியல் தீர் வையும் நோக்கிய சாமர்த்தியமான இராஜ தந்திர நகர்வே இன்று எமக்கு தேவை என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா; கணேசபுரம் பகுதியில் கிரா மிய .வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற் றது. அதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "இது தேர்தல் காலம். மாகாணசபை தேர்த லில் ஒரு சின்னத்துடனும், ஜனாதிபதி தேர்த லில் வேறு சின்னத்துடனும் வந்த அரசியல் வாதிகள் சிலர், இப்போது மீண்டும் மாற்றுச் சின்னத்தில் வேறு நிறத்துடன் உங்களிடம் வருகின்றார்கள். இவர்கள் பற்றி அவதான மாக இருங்கள்"என எச்சரித்தார்.

"மாகாண சபை தேர்தலின் போது மக்க ளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இயலு மானவரை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதாகவும் மத்திய அரசிடமிருந்து மாகாண மக்களுக்கான அபிவிருத்திக்கான வளங்களை பேரம் பேசி வாங்கிக் கொடுக் கக்கூடிய திறமையுடையவர்களை இம்முறை நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள்" என் றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததில்லை

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நலீன் பண்டார தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனத்திற்கு அரச பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன. எனினும், இந்த ஒவ்வொரு பேருந்திற்கும் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள் ளன.

ஐக்கிய தேசியக் கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் அரச சொத்துக்களை கட்சியின் தேவைகளுக்காக துஷ்பிரயோகம் செய்ததில்லை.

அன்று மகிந்த ராஜபக்ஷ வின் கூட்டங்களுக்கு மக்களை அழைத்துச் சென்ற பேருந்துகளுக்கு இதுவரையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு கட்டணங்கள் செலுத்தப்படவில்லை.

மகிந்த அரசாங்கம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இன்னமும் பல இலட்ச ரூபா கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அரச சொத்துக்கள், அதிகாரிகள், அரச பணம் என பல்வேறு வழிகளிலும் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டனர்.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், சூரியவெவ மைதானம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் பாரிய ளவில் பணம் விரயமாக்கப் பட்டுள்ளது.

சமுர்த்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 375 கோடி ரூபா பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ இரண்டு முட்டாள்தனங்களை செய்துள்ளார்.

ஒன்று பதவிக் காலம் நிறைவடைய இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகாத நிலையில் ஜனாதிபதி தேர்தலை நடத்தியமை, இரண்டாவது குருணாகல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தமை. இரண்டுமே முட்டாள்தனமான செயல்களாகும் என நலீன் பண்டார நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## வேட்புமனுவை மறுப்பதன் மூலம் போதைவஸ்தை ஒழிக்கமுடியாது

**கீதா குமாரசிங்க தெரிவிப்பு**

வேட்புமனுக்களை வழங்காது விடுவதன் மூலம் நாட்டில் இருந்து போதைவஸ்து வர்த்தகத்தை ஒழிக்க முடியாது என்று தென்மாகாண சபை உறுப்பினரும் நடிகையுமான கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்

போதைவஸ்து குற்றச்சாட்டுக்களை காரணம் காட்டி இந்த முறை தேர்தலில் சிலருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்கள் வழங்கப்படவில்லை.

இதனைக் குறித்தே கீதாவின் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. போதைவஸ்து காரணமாக இளம்பரம்பரையினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலையில் யாரும் யார் மீதும் குற்றங்களை சுமத்தலாம் எனினும் நீதிமன்றத்தில் அது நிரூபிக்கப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 350 | 400 | 400 |
| தக்காளி | 200 | 120 | 120 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 120 | 140 | 150 | 240. | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 140 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 160 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 100 | 140 | 120 |
| பயற்றங்காய் | 80 | 80 | 90 | 60 | 90 |
| லீக்ஸ் | 100 | 100 | 130 | 200 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 110 | 120 | 120 |
| கறிமிளகாய் | 100 | 180 | 180 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 250 | 220-310 | 160 | 200 |
| போஞ்சி | 160 | 180 | 170 | 200 | 170 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 30 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 90 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | — | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 250 | — | 240 | 180 |
| முள்ளங்கி | 60 | 50 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 15 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 433

ஜெயராசா விபுசன்

உன் மனம் ஒன்றே
உன்னை வீழ்த்தக் கூடிய
ஒரே ஆயுதம்.
அது தெளிவாக இருக்கும்
வரையில் நீ
ஒருவராலும்
வீழ்த்தப்படமாட்டாய்.

தர்மிதன் சிவசாந்தன்





குனா செல்வா




ரிஷி விஷ்வா




விமல் கெவின்




பார்த்தி தவராசா

என்ன தான் technology வளர்ந்தாலும் ATMல இருந்து 10 ரூபா நோட்டு வராது



நீ எவ்ளோ தான் பொண்ணுங்களுக்கு recharge பண்ணாலும் missed call தவிர வேற எதுவும் வராது.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரரசரின் மீள் வருகை!

கைக்குக் கிடைத்த நல்லாடசி, வாய்க்குக் கிடைக்காமல் போயவிடுமோ என்கிற பதற்றமொன்றுடன் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது தேசிய அரசியல் அரங்கு. ஆட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, புதிய அரசியல் ஒப்பனைகளுடன் மீண்டும், தனது கூட்டத்தாரோடு களமிறங்கியிருக்கிறார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைவராகப் பதவி வகிக்கும், ஐ.ம.சு.கூட்டமைப்பிலேயே, மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரின் விசுவாசிகளுக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனு வழங்கப்பட்டிருப்பதானது, நல்லாட்சி ரசிகர்களின் மனதில் பேரிடியை இறக்கி விட்டிருக்கிறது.

இதனால், ஆறு மாதங்களுக்கு முன்னர் இலங்கை அரசியலில் “வானத்திலிருந்து இறங்கிய ஒரு மீட்பர்” போல் பார்க்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்று ஒரு சிலருக்கு துரோகியாகி விடுவார் போல் தெரிகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷ தோற்றவுடன், அவரின் ஆட்டம் முடிந்தது என்றுதான், அவருக்கு எதிரானவர்கள் அனைவரும் நினைத்திருந்தனர். பின்னர், பொதுத் தேர்தலொன்று நடைபெறுமாயின் மஹிந்த ராஜபக்ஷ, அந்தத் தேர்தலில் போடடியிடுவார் என்கிற பேச்சு எழுநதது.

அப்படித்தான் அவர் போட்டியிட்டாலும், ஏதாவது ஊர் - பெயர் தெரியாததொரு கட்சியில்தான் போட்டியிட வேண்டும், ஜனாதிபதி தலைமைப் பதவி வகிக்கும் ஐ.ம.சு. கூட்டமைப்பிலோ அல்லது சுதந்திரக் கட்சியிலோ மஹிந்த தலைகாட்ட முடியாது என்று கூறப்பட்டது. கடைசியில் பார்த்தால், மைத்திரி தலைவராக உள்ள ஐ.ம.சு. கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திலேயே மஹிந்தவும் அவரின் ஆட்களும் களமிறங்கியுள்ளனர்.

அப்படியென்றால், இடையில் - என்னதான் நடந்தது? ஊடகங்களும் ஊர்க்கதைகளுமாக ஆளுக்கொன்றைச் சொல்கின்றன. ஐ.ம.சு.கூட்டமைப்புக்குள்ளும் சுதந்திரக் கட்சிக்குள்ளும் ஜனாதிபதி மைத்திரி எதுவும் செய்துகொள்ள முடியாத, கையாலாகாத்தனத்துடன் உள்ளார் என்றும், அந்த நிலையைப் பயன்படுத்தி அவருக்கு அழுத்தம் கொடுத்தே, மஹிந்த தரப்பு, தமக்கான வேட்பாளர் நியமனங்களைப் பெற்றுக்கொண்டதாகவும் ஒரு கதை உள்ளது.

ஐ.ம.சு.கூட்டமைப்பு என்பது, பல அரசியல் கட்சிகளின் கூட்டணியாகும். இந்தக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் பெரிய கட்சியாகும். அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்தான், ஐ.ம.சு.கூட்டமைப்பின் தலைவராகவும் பதவி வகிப்பார் என்பது கூட்டமைப்பின் ஒப்பந்தத்தில் உள்ளது. ஆக, சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரி உள்ளார.

அந்தவகையில்தான், ஐ.ம.சு. கூட்டமைப்பின் தலைவர் பதவியானது ஜனாதிபதி மைத்திரிக்குக் கிடைத்தது.

இன்னொருபுறம் வேறு கதையொன்றும் உள்ளது. சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி மைத்திரி தலைமையேற்ற பிறகு நடைபெறவுள்ள முதல் தேர்தல் வருகிற பொதுத் தேர்தலாகும். எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில், தான் தலைமை வகிக்கின்ற கட்சியும், கூட்டணியும் வெற்றிபெற வேண்டும். அப்படி வெற்றி பெற்றால்தான், மைத்திரியின் கட்சித் தலைமைப் பதவியினைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதனால்தான், மஹிந்தவும் அவரின் கூட்டாளிகளும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு மைத்திரி ஒத்துக் கொண்டார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, இவை அனைத்துக்கும் மாற்றமான வேறொரு கதையொன்றும் உலவுகிறது. அதாவது, இப்போது எதுவெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றனவோ, அவை அனைத்தும் - மைத்திரி மற்றும் அவரின் சகாக்களின் திட்டத்தின் அடிப்படையிலானவையாக இருக்கக்கூடுமென்றும் கூறப்படுகிறது.

வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் கேட்டு பிரச்சினைகளை ஏற்படுத்திய மஹிந்தவுக்கும் அவரின் குழுவினருக்கும் சந்தர்ப்பத்தினை வழங்குவது. பின்னர், ஐ.ம.சு.கூட்டமைப்பு மற்றும் சுதந்திரக் கட்சியிலுள்ள மைத்திரியின் சகாக்கள், ஐ.தே.க. பக்கம் கழன்று செல்வது.

இதனையடுத்து, ஐ.ம.சு.கூட்டமைப்புக்குள் மஹிந்த மற்றும் அவரின் குழுவினரை தனிமைப் படுத்துவது. பின்னர், ஐ.ம.சு:கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்வரும் தேர்தலில் பெற்றுக் கொள்ளும் நஷ்டங்கள் அனைத்தினையும் மஹிந்தவின் தலையில் போட்டு, அவரை நாறடிப்பது. இந்தத் திட்டத்தின்படிதான் இப்போது நடக்கும் எல்லாவற்றினையும் மைத்திரி அணி நகர்த்திக் கொண்டிருப்பதாகவும் ஓர் அனுமானம் இருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பிறகு விடுத்த அறிக்கைகள் மறக்க முடியாதவை.

ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்றிருந்தால், தன்னையும் தன் குடும்பத்தையும் மஹிந்த ராஜபக்ஷ மண்ணுக்குள் புதைத்திருப்பார் என்று மைத்திரி தெரிவித்திருந்தார். அந்தளவு தனக்கு கொடுமை செய்கின்ற மனநிலையிலுள்ள ஒருவருக்கு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தினை மைத்திரிபால சிறிசேன வழங்கியிருக்கின்றார் என்றால், அதற்கு பின்னால் ‘வெற்று’க் காரணங்கள் இருக்க முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் முக்கிய விசுவாசிகளும் புரிந்ததாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில்- மைத்திரி அரசாங்கமானது, போதும் போதும் என்கிற அளவுக்கு போட்டுடைத்து விட்டது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் சண்டியர்களாக இருந்த துமிந்த சில்வா மற்றும் மேர்வின் சில்வா போன்ற அரசியல்வாதிகளுக்கு ஐ.ம.சு.கூட்டமைப்பில் வேட்புமனு வழங்கப்படவில்லை. குறித்த நபர்கள், போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்கள் என்பதால்தான் அவர்களுக்கு வேட்புமனு வழங்கவில்லை என்று, மைத்திரி தரப்பு தெரிவித்துள்ளது.

அப்படியென்றால் இதற்கு அர்த்தம்தான் என்ன? மஹிந்த ராஜபக்ஷ - அவருடைய ஆட்சியில், போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் அரசியல்வாதிகளையெல்லாம் பாலூட்டி வளர்த்திருக்கிறார் என்கிற செய்தியை இது சொல்கிறதல்லவா? இந்தச் செய்தியைப் புரிந்துகொள்ள முடியாதளவு வாக்காளர்கள் இல்லை என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆக, ஐ.ம.சு.கூட்டமைப்பில் மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கியது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, கோபித்துக்கு கொண்டு லண்டன் சென்றது. ராஜித்த மற்றும் சம்பிக்க குழுவினர் ஐ.தே.கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது என்று, எல்லாமே, ஆம் எல்லாமே தான். மைத்திரி அணியின் மிகத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளாக இருக்கும் என்கிற நிகழ்தகவுக்கான சாத்தியங்கள் இல்லாமலுமில்லை.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மஹிந்தவும் அவரின் அணியினரும், ஆட்சியொன்றினை அமைக்கும் பலத்துடன் வெல்லப் போவதில்லை என்பதுதான் பலரின் வாதமாக உள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதை மிக இலகுவாக விளக்கிச் சொன்னார்.

மிகப்பெரும் அரசியல் அதிகாரத்துடனும் பெருமளவு பணம் புகழுடனும் இருந்தபோது, தன்னுடைய ஜனாதிபதித் தேர்தலிலேயே வெற்றி பெற முடியாத மஹிந்த ராஜபக்ஷ, மேற்படி அனைத்தையும் இழந்த நிலையில், ஆட்சியினையொன்றும் பிடிக்க முடியாது என்றார். இது தட்டிக்கழிக்க முடியாத வாதமாகும்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் அணியினரும் வெற்றி பெற்று விடக் கூடாது என்பதில், சிறுபான்மை சமூகங்களும் அவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதான கட்சிகளும் முனைப்பாக உள்ளன.

இந்த நிலையில், ஜனாதிபதியும் நடைபெறப் போகின்ற தேர்தலில், எந்தக் கட்சிக்கும் சார்பற்று இருப்பதற்கான தீர்மானமொன்றினை மேற்கொள்ளவுள்ளார் எனவும் அறிய முடிகிறது. அவ்வாறு ஒரு தீர்மானம் எடுக்கப்படுமானால், அது, ஐ.ம.சு.கூட்டமைப்புக்கும் மஹிந்த குழுவினருக்கும் மேலும் பாத்கத்தினை ஏற்படுத்தி விடும்.

நியாயப்படி பார்த்தால், ஐ.ம.சு. கூட்டமைப்புக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் மைத்திரிபால சிறிசேன தனது ஆதரவினைத் தெரிவிப்பதோடு, மறைமுகமாகவேனும் பிரசாரங்களில் ஈடுபட வேண்டும. அவ்வாறு செய்யாமல், வருகிற பொதுத் தேர்தலில் அவர் நடுநிலை வகிப்பாரெனில் அதற்கு அர்த்தம் என்ன என்பதை புரிந்து கொள்ளல் என்பது அவ்வளவு கடினமாதல்ல.

இங்கு மைத்திரியின் நடுநிலை என்பது, மஹிந்தவும் அவரின் குழுவினரும் போட்டியிடுகின்ற ஐ.ம.சு.கூட்டமைப்பு மீதான பிடிப்பின்மையினையே வெளிப்படுத்தி நிற்கும்.

இதுவெல்லாம் ஒருபுறமிருக்க, மஹிந்தவின் மீள்வரவானது, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியலில் பெரும் வெளிச்சத்தினை ஏற்படுத்தி விட்டுள்ளதாக, அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ராஜித்த சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க, அத்துரலியே ரத்தன தேரர் போன்றோர், ரணிலைத் தேடிச் செல்லும் நிலையினை உருவாக்கியிருப்பது மஹிந்த ராஜபக்ஷவினுடைய மீள் வருகையாகும். இன்னும் சொன்னால், ரணிலின் பெரு வெற்றியினை மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீள்வருகை உறுதிப்படுத்தி விட்டது போலவே தோன்றுகிறது.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ - பொதுத் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம், முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு சம்பிரதாயபூர்வமாக வழங்கப்படும் சலுகைகள் அனைத்தினையும் இழந்து விடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் அரசாங்க வசிப்பிடம், அரசாங்க வாகனங்கள், அவற்றுக்கான எரிபொருட் செலவுகள், பெரும் படையணியைக் கொண்ட பாதுகாப்பு, முன்னாள் ஜனாதிபதிக்கான செயலகம், அதற்கான பணியாட்கள், மேலும் இதர செலவுகளுக்கான கொடுப்பனவுகள் என்று ஏராளம் உள்ளன. இவை அனைத்தும், முன்னாள் ஜனாதிபதியொரு வருக்கு சம்பிரதாயபூர்வமாக வழங்கப்படும் சலுகைகளாகும். ஆனால், முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு இவற்றையெல்லாம் வழங்க வேண்டுமென சட்டத்தில் எங்கும் கூறப்படவில்லை.

எனவே, மேற்சொன்ன சலுகைகள் அனைத்தினையும் - மஹிந்த ராஜபக்ஷ இழக்கும் நிலையொன்றினை அவரே உருவாக்கிவிட்டுள்ளார். மேலும், எதிர்வரும் நாடாளுமன்றில் மஹிந்த தரப்பினரால் ஆட்சியொன்றினை அமைக்க முடியாது போகும் பட்சத்தில், சாதாரணமானதொரு உறுப்பினராகத்தான் நாடாளுமன்றுக்குள் அவர் சென்று - வர வேண்டியிருக்கும்.

இப்படியெல்லாம் நடந்தால், அது, பார்ப்பதற்கு மிகவும் பரிதாபகரமானதொரு நிலையாகவே அமையும். அதற்கு அவரைத் தவிர வேறு யார் பொறுப்பாக முடியும்?! அப்போது வேண்டுமானால், ஏன் இதற்குள் இறங்கினோம் என்று, மஹிந்த ராஜபக்ஷ, தனது மீள் வருகை குறித்து கவலைப்படக் கூடும். அதுவரையில், இந்த அரசியல் ஆட்டத்தின் சூடு தணியப் போவதில்லை!



-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த பாராளுமன்றம் வந்தாலும் விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## மகிந்த அச்சம் வெறு மாயையே என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

**பாரிய நிதிமோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம சாட்ப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ பாராளுமனறம் வந்தாலும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட வேண்டும். நீதிமன்றத் தன் முன் நிறத்தப்பட வேண்டும் என வலியுறுத்தும் ஜே.வி.பி., தேர்தலில் "மகந்த" அச்சம் வெறும் மாயையே என்றும் தெரிவித்துள்ளது.**

பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ்மா அதிபராக பதவி வகித்தவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கீழ் மட்டத்திற்கு வந்தது போன்று மகிந்த ஜனாதிபதியாக பதவி வகித்துவிட்டு கீழ் நிலைக்கு இன்று இறங்கி வந்துள்ளார். அந்தளவுக்கு அரசியல் பதவி பேராசை அவரை ஆட்கொண்டுள்ளது.


ஜனாதிபதியாக ஆட்சி வகித்த காலத்தில் மகிந்த பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்படுகின்றது.எனவே அவர் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானாலும் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட வேண்டும். நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். தண்டிக்கப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் ஓய்வுபெற்ற பின்னர் அரசியலுக்கு வரவில்லை.

எனவே முன்னாள் ஜனாதிபதிகள் தொடர்பான சிறப்புரிமைகள் பாதுகாப்பு உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரச்சினை எழவில்லை.ஆனால் மகிந்த அரசியலுக்குள் புகுந்து புதுப்பிரச்சினையை உருவாக்கியுள்ளார்.

இவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்கான சிறப்புரிமைகள் வழங்கப்படுவதென்பது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கும் செயலாகும்.அத்தோடு இந்தப் பொதுத் தேர்தலில் "மகிந்த" பயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது வெறும் மாயையாகும். எதற்கும் மக்கள் அஞ்சத் தேவையில்லை என்றும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.மாதகல் சென் யோசவ் மகா வித்தியாலய தொழில்நுட்ப ஆய்வுகூடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.வித்தியாலய அதிபர் யோ.எ.பங்கிராஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் நாடாவெட்டி ஆய்வுகூடத்தினை திறந்துவைத்தார். இதன்போது வலிகாமம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன்,பங்குத்தந்தை அருட்பணி கனிசியஸ்ராஜ் மற்றும் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சிவானந்தராஜா ஆகியோர் கலந்து நிகழ்வை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் பிரதியமைச்சர்

# பிரேமலால் ஐயசேகரவிற்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

முன்னாள் பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை தொடர்ந்தும் வளக்கமறியலில் வைக்குமாறு பெல்மதுல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பெல்மதுல்ல நீதவான் தினேஷ் லக்மால் பெரேரா உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சி ஆதரவாளர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பிரதியமைச்சர் உட்பட மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி பிரதியமைச்சருடன் சேர்த்து ஏனைய ஐந்து பேரையும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மதுல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# மனுவை வாபஸ் பெற்றார் நீதிபதி ஆப்ரு

தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பொலிஸ் விசாரணைகளை தடைசெய்ய வேண்டுமெனக் கோரி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்ற நீதிபதி சரத் டி ஆப்ரு மீளப்பெற்றுள்ளார்.

நீதிபதி ஆப்ரு தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு, பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதிபதிகள் குழுவினரால் விசாரணைக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தன்னுடைய கட்சிக்காரர் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதனால் அடிப்படை உரிமை மீறல்கள் இடம்பெற வாய்ப்பில்லை என்று நீதியரசர் சரத் டி ஆப்ரு சார்பாக ஆஜராகியிருந்த சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக குறித்த மனுவை வாபஸ் பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு நீதிமன்றைக் கேட்டுக்கொண்டார்.

சட்டத்தரணியின் கோரிக்கையை பரிசீலித்து பார்த்த மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் குறித்த மனுவை வாபஸ் பெறுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

தனது வீட்டுப் பணிப்பெண்ணை தாக்கியதாகக் குற்றம்சாட்டப்பட்ட நீதிபதி ஆப்ரு அண்மையில் கல்கிசை நீதவான் நீதிமன்றால் பிணையில் விடுதலைசெய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஞானிகள்

ஒருவர் தனியாக ஓரிடத்தில் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா... தியானம் செய்து கொண்டிருக்கிறாரா... என்பதை எப்படி கண்டு பிடிப்பது?

நமக்குத் தெரிந்த வரையில் தூக்கம் என்றால் தலை அடிக்கடி சாயும். பின் நிமிரும். தியானம் என்றால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும்.

தூக்கத்திற்கும் தியானத்திற்கும் அதிக வித்தியாசம் உண்டு. ஒரு முட்டாள் தூங்கப்போனால் முட்டாளாகவே திரும்பி வருகிறான். அதே முட்டாள் தியானம் செய்தால் ஞானியாகத் திரும்பி வருகிறான்.

அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

இப்பொழுது நாம் ஒரு அழகான ரோஜாவைப் பூவைப் பார்க்கிறோம். "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று வியக்கிறோம்.

ஒரு ஞானி அதே ரோஜாவைப் பூவைப் பார்க்கிறார். அவரும் "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று நினைக்கிறார்.

உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்கள் மூலமாக உணர்கிறோமோ அப்படித்தான் அவர்களும் உணர்கிறார்கள். அதில் ஒன்றும் வித்தியாசமில்லை.

அல்வா சாப்பிடுகிறோம். அது நமக்கு மட்டும்தான் இனிக்கும். ஞானிகளுக்கெல்லாம் கசக்கும் என்றா சொல்வோம்? அப்படியில்லை. அவர்களுக்கும் அதே நிலமைதான்.

அப்படியானால் ஞானிகளுக்கும் நமக்கும் என்னதான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக்கட்டத்தில் ஆரம்பமாகிறது? அதை இப்பொழுது பார்ப்போம்.

இப்பொழுது மறுபடியும் அந்த ரோஜாப்பூவின் பக்கம் போவோம். ஞானி அதைப் பார்க்கிறார்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது! என்று நினைக்கிறார். அதன் பின் அதையே நினைப்பதில்லை. வேறு வேலை பார்க்கப் போய் விடுவார். அல்லது இயற்கையின் ஆற்றலைப்பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். அவ்வளவுதான்! ஆனால் நாம் அப்படிச் செய்ய மாட்டோம்.

நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலில் அந்த ரோஜாப் பூவைப் பார்ப்போம்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது என்று நினைப்போம். அந்த அழகை ரசிப்போம். அதன்பின் அந்த மலர் நமக்கு வேண்டும் என்று நினைப்போம்.

அதற்கு அடுத்த கட்டம்... அந்த மலர் இல்லையென்றால் நம்மால் வாழ முடியாது என்ற நிலைமைக்கு வந்து விடுவோம்! உடனே அந்த மலரை அடைவதற்கு முயற்சி செய்வோம்!

அதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள் மேல் நமக்குக் கோபம் வரும். அந்தக் கோபத்தின் காரணமாக நமது விவேக புத்தியை இழப்போம்! யாரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை மறந்து விடுவோம்.

அதன் காரணமாக ஞாபகமறதி ஏற்படும். அதாவது முன்பு விவேக புத்தி மழுங்கியிருந்தால் அது இப்போழுது அடியோடு இல்லை என்ற நிலை ஏற்படும்.

அதன் காரணமாக நிம் புத்தியை இழப்போம். கடைசியில் அழிவோம். இந்த நிலைமை நமக்கு வந்துவிடக் கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

நமக்கு கெடுதல் செய்யக்கூடிய ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். ஒரு விடயம் தெரியுமா? எந்த ஆசைக்குமே முதலில் வலு கிடையாது.

அதைப்பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகிறது. இளம் தளிராக இருந்தது இப்பொழுது பெரிய மரமாகி விடுகிறது.

ஞானிகள் இந்தளவுக்கு அதை வளர விடுவதில்லை. அது தான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு இளைஞன் கையில் தடியொன்றை வைத்துக் கொண்டு நடந்து போய்க்கொண்டிருந்தான். அதே நேரம் வயதான ஒருவரும் ஒரு தடியை வைத்துக் கொண்டு நடந்து போகிறார். அது அவருக்கு ஊன்றுகோல். அது இல்லையெனில் அவரால் நடக்க முடியாது. அது தவறி கீழே விழுந்தால் அவரும் விழுந்து விடுவார்.

ஆனால், அந்த இளைஞன் அப்படியல்ல. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துக் கொண்டுபோனால் கூட அவன் கவலைப்படமாட்டான். அவன் அந்தக் கைத்தடியைப் பயன்படுத்துவதுபோல்தான் ஞானிகள் உலகப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால், நம்மைப் போன்றவர்கள் அந்த வயதானவர் கைத்தடியை பயன்படுத்துவது போல் உலகப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். இதுதான் ஞானிகளுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

ஞானி என்பவர் பொருட்களைத் துறக்கமாட்டார். அதன் மீதுள்ள பற்றுதலைத்தான் துறப்பார். எனக்குத் தெரிந்த ஞானி ஒருவர் இருந்தார். அவர் சொன்னார்.

"1988 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதியை என்னால் மறக்க முடியாது" என்றார்.

"ஏன்" என்று கேட்டேன்.

"அதுதான் எனக்கு ஞானம் வந்த நாள்" என்றார்.

"அப்படியா?" என்றேன்.

"ஆமாம், அன்று தான் எனக்கு திருமணமானது என் மனைவி பெயர் ஞானம்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2015~17.08.2015



மனதில் நினைத்ததை நிறைவேற்றும் நேரம்! சூரியனை இராசிநாதனாகப் பெற்றதினால் காரியங்களை துணிந்து செய்யும் .சிம்ம இராசி நேயர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது பஞ்சம அஷ்டமாதிபதியான குரு பகவான் உங்கள் ராசிக்கு பத்து நாட்களுக்கு முன்னதாகவே வந்து அமர்ந்து நன்மைகளைத் தரத் தொடங்கிவிட்டார். அவரோடு 3, 20 இறகு அதிபதியான சுக்ரனும் இணைந்திருப்பதால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். எண்ணிய எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எண்ணற்ற நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெற நல்ல வழிபிறக்கும். கண்ணும் கருத்துமாக பாவித்து வந்த உங்கள் குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். மண் வாங்குவோமா மனை வாங்குவோமா, பொன் வாங்குவோமா, பொருளை வாங்குவோமா என்ற சிந்தனை மேலோங்கும்.

ஜென்ம குரு ஆதிக்கம் இருப்பதால் திடீர், திடீரென பயணங்கள் உருவாகும். அலைச்சல் அதிகரிக்கும. ஆர்வத்தோடு பணிபுரிவீர்கள். உழைப்பு கூடும் இந்த நேரத்தில் உடல் நலத்திலும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். சிறு சிறு தொல்லைகள் ஜென்ம குருவால் வந்து கொண்டுதான் இருக்கும். குரு பார்த்தாலும் கோடி நன்மை, குரு சேர்ந்தாலும் கோடி தோஷ நிவர்த்தி என்பதால் தொல்லைகள் ஏற்பட்டாலும் முடிவில் நல்ல முடிவாக இருக்கும். நோய்க்கான அறிகுறி தென்படுகிற பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

விரய ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றார்கள். இதன விளைவாக மாதத்தின் மையப் பகுதியில் கூடுதல் விரயம் ஏற்படலாம். குறிப்பாக செவ்வாய் நீச்சம் பெறும் நேரத்தில் வாங்கிய சொத்துக்களை ஒரு சிலர் விற்க நேரிடலாம். அதற்காக வருத்தப்பட வேண்டாம். மீண்டும் சொத்துக்கள் வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உருவாகும். பூர்வீக சொத்துக்களை விற்று விட்டுப் புதிய சொத்துக்களை வாங்க நினைப்பவர்கள், யார் பெயரில் வாங்கினால் சொத்துக்கள் நிலைக்கும் என்பதை ஆராய்ந்து முடிவு செய்து வாங்குவது நல்லது. வக்ர சனியாக இருந்து மூன்றாமிடத்தில் தற்சமயம் சனி சஞ்சரித்தாலும் மீண்டும் அர்த்தாஷ்டமச் சனியாக மாறும் பொழுது மாற்றங்கள் பலவிதத்திலும் வந்து சேரும். வரும் மாற்றம் ஏமாற்றமாக இல்லாமல் இனிய மாற்றமாக அமைய சனி பகவான் வழிபாட்டையும், குரு பகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**கடகத்தில் செவ்வாய் நீச்சம் பெறும் நேரம்!**

கடகத்தில் ஜூலை 31 ஆம் தகதி செவ்வாய் நீச்சம் பெறப் போகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல, சுகாதிபதி நீச்சம் பெறும் பொழுது சுகக் கேடுகள் அதிகரிக்கும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். ஆரோக்கியத்திற்கென்று உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ ஒரு தொகையைச் செலவிட நேரிடும். பழைய வாகனங்களைக் கொடுத்து வட்டுப் புதிய வாகனங்களை வாங்க நினைப்பவர்களுக்கு இது உகந்த நேரமாகும். சகோதரகாரகன் செவ்வாய் வலிமை இழப்பதால் சகோதர வர்க்கத்தினரோடு சச்சரவுகள் அதிகரிக்கலாம். அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். முன் கோபத்தைக் கட்டுபபடுத்துவது நல்லது. குருவின் பார்வை பஞ்சம ஸ்தானத்தில் பதிவதால் செவ்வாய் நீச்சம் பெற்றிருந்தாலும் கூட நீண்ட நாட்களாக தள்ளிப் போய்க்கொண்டிருந்த கல்யாணம், சீமந்தம் போன்ற சுபநிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறுவதில் தடை ஏற்படாது. அதற்கான முயற்சிகளில் வெற்றி அளிக்கும் விதத்தில் அமையும்.




**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

தனலாபாதிபதியான புதன்உங்கள ராசியில் ஆகஸ்ட் முதல் தகதியிலிருந்து சஞ்சரிக்க போகின்றார். இது மிகுந்த யோகமான நேரமா கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தல் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் வந்து சேரும். பட்ட கஷ்டத்திற்கு பலன் கிடைத்தது என்று சொல்வீர்கள். பகை மாறி பாசம் கூடும்.

நகை நட்டுகளை வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள். மாமன், மைத்துனர் வழி உறவு பலப்படும். சேமிப்பு அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். வெளிநாட்டு முயற்சிகள் அனுகூலமாக இருக்கும். குடும பத்தினர்கள் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். இம்மாதம் வியாழன் தோறும் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வதோடு வைரவரையும் வழிபட்டு வளர்ச்சியை கூட்டிக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் நினைத்த காரியம் நிறைவேறும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெற வழிபிறக்கும். புகழ் மிக்கவர்கள் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். தொண்டர்களின் ஆதரவும், துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவும் வாய்ப்பும் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். ஒற்றுமை பலப்படும். குழந்தைகளின் உதிரி வருமானங்கள் கிடைக்கும். அவர்களின் கல்யாணக் கனவுகளையும், கடல் தாண்டும் முயற்சிக்கும் வித்திடுவீர்கள். செவ்வாய் நீச்சம் பெறும்பொழுது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்தை வழங்கும். வைரவர் வழிபாடு வருங் காலத்தை நலமாக்கிக் கொடுக்கும்.

# மனதில் நினைத்ததை நிறைவேற்றும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



ராகு பலத்தால் யோகம் வரும்! புதனை இராசிநாதனாகப் பெற்றதால் புதுமையான முறைகளை கையாளும் ஆற்றல் பெற்ற கன்னி ராசிநேயர்களே!

ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத தொடக்கத்தில் ராசிநாதன் புதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வருமானப் பற்றாக்குறை அகலும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். வங்கி சேமிப்பு உயரும். சென்ற மாதத்தில் தீட்டிய திட்டங்களைச் செயற்படுதத முடியவில்லையே என்று ஏங்கியவர்கள் இந்த மாதத்தில் அவற்றை முடிக்க வாய்ப்புகள் கைகூடிவரும.

தொழிலில் கவனம் செலுத்தா விட்டாலும் கூட லாபம் அதிகமாகவே வந்து சேரும். மேலும் ஜென்ம ராகு நற்பலன்களையே அள்ளி வழங்குவார். 'கன்னி ராகு எண்ணியதை நிறைவேற்றும்' என்பது பழமொழி. எனவே நீங்கள் எந்த மாதிரியான திட்டங்களைச் செயற்படுத்த நினைத்தாலும் அது வெற்றிகரமாக முடித்துக்கொடுக்க ராகுபகவான் வழிகாட்டுவார். அதே நேரம் ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டு அகலும். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்பட்டால்.ஒற்றுமை பலப்படும். குடும்ப விஷயங்களை மூன்றாம் நபரிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது.

குரு பகவான் தற்சமயம் விரய ஸ்தானத்தில் உள்ளார். இருப்பினும் அதன் ஆதிபத்யங்களைப் பார்த்தே நாம் முடிவெடுக்க வேண்டும். 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குருபகவான் விளங்குவதால் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் 12 இல் மறைந்திருப்பது யோகம் தான். விபரீத ராஜயோக அடிப்படையில் சில நல்ல மாற்றங்கள் வந்து சேரும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். இ[illegible] வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். இல்லத்தில் திடீரென சுப காரியப் பேச்சுக்கள் நடைபெற்று மகிழச்சியை வழங்கும். பயணங்களால் பலன் உண்டு. தாய்வழி உறவினர்களால் தக்க விதத்தில் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வீர்கள். நீண்ட தூரப் பயணங்களை ஒரு சிலர் மேற்கொள்ள நேரிடும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். இதுபோன்ற காலங்களில் குருவை வழிபடுவதன் மூலம குழப்பங்களிலிருந்து விடுபட இயலும்.

**கடகத்தில் செவ்வாய் நீச்சம் பெறும் நேரம்!**

கடகத்தில்செவ்வாய்ஜூலை 31 ஆம் திகதி நீச்சம் பெறப் போகிறார். 3, 8 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது நன்மை தான். இது மிகுந்த யோக காலமாகும். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம மேலோங்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். சகோதர சச்சரவுகள் அகலும். வழக்குகள் சாதகமாக முடியும. நீண்டநாள் நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். இல்லத்தில் உள்ளவர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி சொத்துக்களை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். வக்ர சனியின் இயககம் குடுமப ஸ்தானத்தில் இருப்பதும் நன்மை தான். உங்கள் ராசிநாதன் புதனுக்கு சனி நட்பு கிரகம் என்பதால் குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் நேரமிது.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் முதல் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக ஓரளவு விரயங்கள் ஏற்பட்டாலும் வருமானம் திருப்திகரமாக இருக்கும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். நீண்ட நாள் பகை மாறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருமானம் வந்து சேரும். இலாகா மாற்றங்களையும், இட மாற்றங்களையும் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு நல்ல மாற்றங்கள் வருவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.




**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதமாகும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். உடல் நலம் சீராகும. ஊர் மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும. உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க, வீடு வாங்க ஆயத்தம் செய்யலாமா? என்று குடும்ப உறுப்பினர்கள் சிந்திப்பர். குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளை எதிர்பார்த்தபடி நடத்திப் பார்ப்பீர்கள். பெற்றோர்களின் அரவணைப்பிற்கு ஆளாக நேரிடும். தாய்வழி ஆதரவு உண்டு. ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதால் முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரம் செய்வதன் மூலம் சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ள இயலும். குரு வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

# ராகு பலத்தால் யோகம் வரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகள் - இராணுவத்தினர் லிபியாவில் பயங்கர மோதல்




லிபியாவின் பல்வேறு பகுதிகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு பல நகரங்களை கைப்பற்றிய ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் டிரி போலியில் உள்ள தூதரகத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

லிபியா இராணுவத்தினர், ஐ.எஸ் .ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆக்கிர மித்த பகுதிகளை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் பெங்காஷி என்ற பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே பயங்கர சண்டை நடந்தது.

இதில் இராணுவ வீரர்கள் 5 பேர் பலியாகினர். மேலும் 6 பேர் படுகாயம் அடைந்தனர். மற்றொரு சம்பவமாக, குடியிருப்பு பகுதி ஒன்றில் ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகளால் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை செயலிழக்க செய்யும்போது, குண்டு வெடித்து 5 இராணுவவீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். (இ-7)

# விஸ்வநாதன் மறைவுக்கு பிரதமர் மோடி அனுதாபம்



மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ் வநாதன் மறைவுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் டுவிட்டரில் தெரிவித்துள்ளதாவது,

இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனின் மறைவு துரதிர்ஷ்டவசமானது. இசையுலக ரசிகர்களுக்கு பேரிழப்பும் ஆகும். அவருடைய இசையை தலைமுறை கடந்தும் மக்கள் ரசித்து வருகின்றனர்.

இசைத்துறையில், அவர் தனது காலத்தில் எப்போதும் முன்னணியில் இருந்தார். அவரது மறைவால் வாடும் அவருடைய குடும்பத்தினருக்கும், எம்.எஸ்.விஸ்வநாதனை போற்றுவோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-7)

# முருகன், பேரறிவாளன், சாந்தன் விடுதலை எதிர்ப்பு வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் உள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்டோரை விடுவிப்பதை எதிர்த்து, மத்திய அரசு தொடர்ந்த வழக்கு விசாரணையை வரும் 21ஆம் திகதிக்கு உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு ஒத்தி வைத்தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை, கருணை மனு மீதான தாமதத்தை காரணம் காட்டி கடந்த ஆண்டு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இதையடுத்து, தண்டனை அனுபவித்த காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை விடுவிக்க தமிழக அரசு முடிவெடுத்தது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு வழக்குத் தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கு விசாரணை 5 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றப்பட்டது. சில மாதங்களாக கிடப்பில் போடப்பட்ட இந்த வழக்கு, தலைமை நீதிபதி எச்.எல்.தத்து தலைமையிலான அமர்வில் நீதிபதிகள் இப்ராஹிம் கலிபுல்லா, பி.சி.கோஷ், யு.யு.லலித், ஏ.எம்.சப்ரே ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, வழக்கு விசாரணையை வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதிகள் இன்றைய தினம் மரண தண்டனைக்கு எதிரான அனைத்து வழக்குகள் மீதும் விசாரணை நடைபெறும் என்றும் அதுவரை 3 பேரின் விடுதலைக்கு விதிக்கப்பட்ட தடை தொடரும் என்றும் தெரிவித்தார்.

இந்த வழக்கில் இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை தற்போதைக்கு மாற்ற விரும்பவில்லை. ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 3 பேர் விடுதலைக்கான தடையை நீக்க முடியாது. ஆயுள் கைதிகளை விடுவிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்றனர். (இ-7)

# புஷ்கரம் விழா நெரிசல் பலி 27 ஆக அதிகரிப்பு



ஆந்திரா மாநிலம் மகா கோதாவரி புஷ்கரம் விழாவில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

படுகாயம் அடைந்தவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. புஷ்கரம் விழாவில் நிகழ்ந்த இந்த உயிரிழப்பு சம்பவம், ஆந்திராவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திராவின் கோதாவரி ஆற்றில் 12 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கோதாவரி புஷ் கரம் விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ராஜமுந்திரியில் நடந்து வருகிறது.

இந்த ஆண்டு குரு பகவான் சிம்மராசியில் பிரவேசிப்பதால் விழா மகா கோதாவரி புஷ்கரமாக கொண்டாடப்படுகிறது. இந்த மகா புஷ்கரம் விழா 144 ஆண்டுக்கு ஒரு முறைதான் கொண்டாடப்படுவது உண்டு.

இது ஆதிபுஷ்கரம் என்றும் அழைக்கப்படுகிறது. நேற்று முன்தினம் தொடங்கிய இவ்விழா வருகிற 25 ஆம் தேதி வரை 12 நாட்கள் நடக்கிறது. இந்த நாட்களில் பக்தர்கள் ஆற்றில் இறங்கி நீராடுவார்கள்.

இந்த நிகழ்விற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரள்வார்கள் என்பதால் ஆந்திர அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்து இருந்தது.

இந்நிலையில் குருபகவான் நேற்று முன்தினம் காலை 6.25 மணிக்கு கோதாவரி ஆற்றில் பிரவேசிக்கிறார் என்றும், அந்த நேரத்தில் புனித நீராடுவது சிறப்பானது என்றும் கருதப்பட்டது. இதனால் கோதாவரியில் புனித நீராட பக்தர்கள் ராஜமுந்திரியில் குவிந்தனர்.

அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர் என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பலர் காயம் அடைந்தனர் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் கூட்டநெரிசலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கையானது 27 ஆக உயர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நெரிசல் காலை 7:10 மணியில் இருந்து 8 மணி வரையில் ஏற் பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் வயதானவர்கள் என்று கூறப்படுகிறது. காயம் அடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆற்றில் புனித நீராட, பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட நேரமாக காத்திருந்தனர், அவர்களில் பலர் மிகவும் நீண்ட தொலைவில் இருந்து பயணம் செய்து வந்து இருந்ததால் மிகவும் சோர்வாக இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட நான்கு பொலிஸார் படுகொலை



சத்தீஷ்கரில் நக்சலைட் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட நான்கு பொலிஸார் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

சத்தீஷ்கர் மாநிலத்தில் உள்ள பிஜப்பூர் மாவட்டம் நக் சலைட்டுகளின் ஆதிக்கம் உள்ள பகுதியாகும்.

நக்சலைட்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில பொலிஸாருடன், நக்சலைட்டு தடுப்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

அங்குள்ள குத்ரூ பகுதியில் இருந்து பிஜப்பூர் நோக்கி கடந்த திங்கட்கிழமை 4 நக்சல் தடுப்பு பிரிவு பொலிஸ்காரர்கள் பேருந்தில் சென்று கொண்டு இருந்தனர்.

சக்னாபல்லி என்ற அடர்ந்த வனப்பகுதி அருகே பேருந்து வந்த போது, நக்சலைட்டுகள் அந்த பேருந்தை வழிமறித்து 4 பொலிஸார கள் கடத்திச்சென்றனர். கடத்தப்பட்டவர்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

நக்சலைட்டுகள் ஆதிக்கம் உள்ள பகுதியில் வீரர்களை பாதுகாப்பு இன்றி செல்ல அனுமதிப்பது இல்லை. ஆனால்கடத்தப்பட்ட 4பேரும் முன் அறிவிப்பு இன்றி சென்று நக்சலைட்டுகளிடம் சிக்கி உள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து கடத்தப்பட்டவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இந்நிலையில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 4 பொலிஸ்காரர்கள் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளனர்.

தீவிரவாதிகளால் பொலிஸ்காரர்கள் கடத்தப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்காரர்கள் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு உள்ளனர் என்று முதல்கட்ட தகவல்கள் தெரிவித்து உள்ளன. இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த எமக்கெல்லாம் சவாலாக திகழ்கின்றார்


## அனுர பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எமக்கெல்லாம் சவாலாகவே திகழ்கின்றார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் மகிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

தேர்தலுக்கு நாமும் ஆயத்தமாகிவிட்டோம். குருநாகல் மாவட்டத்தில் மிக முக்கியமான உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் குருநாகல் மாவட்டத்தில் எங்களுடன் போட்டியிடுகினறார்.

எனவே மகிந்தவுடன் எங்களுக்கு போட்டியில்லை என கூற முடியாது. கடுமையான போட்டி காணப்படுகின்றது. இம்முறை தேர்தல் சுலபமானதல்ல. எனினும் நான் தேர்தலுக்கு அஞ்சப் போவதில்லை. ஏனெனில் நான் மக்களுக்கு சேவைகளை ஆற்றியுள்ளேன். தேர்தலுக்கு வெறும் நான்கு வாரங்கள் மட்டுமே உண்டு. எனவே இரவு-பகல் பாராது நாம் தேர்தல் வெற்றிக்காக உழைக்கின்றோம் என அனுர பிரியதர்சன யாப்பா சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




# 6மோணவர்கள் உட்பட 18பேர் விபத்தில் சிக்கிப்படுகாயம்

(கொழும்பு)


கடுவன-பழைய ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஆறு பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பேருந்துடன் ட்ரக் வண்டி நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பேருந்தில் பயணித்த மாணவர்கள் அறுவர் உள்ளிட்ட எட்டுப் பேரும் ட்ரக் வண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த நால்வரும் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் எம்பிலிபிட்டிய மற்றும் கடுவன ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கடுவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ஜனாதிபதிக்கு ஹரின் பாராட்டு



(கொழும்பு)

தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடு குறித்து பாராட்டுகளை தெரிவிப்பதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதியுடன் ஒரே மேடையில் தற்போதைய ஜனாதிபதி இணைந்து செயற்படமாட்டார் என ஹரின் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரே மேடையில் இணைந்து செயற்பட்டால் அரசியலை விட்டு விலகுவதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ முன்னர் அறிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரியை மதிக்கிறேன்

## ஹக்கீம் தெரிவிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதிகளில் அனைத்தும் நிறைவேற்றபடவில்லை என்றாலும் முடிந்த அளவு நிறைவேற்றியமையினால் அவருக்கு தான் மதிப்பளிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் கண்டியில் இடம்பெற்ற பேரணியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனினும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற வேணடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தை முழுமையாக நீக்குவதாக கூறியதற்கு தற்போது சிறிய அளவிலான அதிகாரம் மாத்திரம் குறைக்கப்பட்டுள்ளது.

குறைந்த அளவலாள அதிகாரத்தையாவது குறைத்தமையினால் அவருக்கு மதிப்பளிக்கின்றேன். எனினும் ஒழுங்கான முறையில் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

இம் முன்னணி உருவாகியிருப்பதற்கான காரணம் கொடுத்த வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவதற்கே என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி அரசியல் ரீதியில் அநாதையாகியுள்ளாராம்

## பொது ஜன பெரமுன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையின் சமகால அரசியல் ரீதியில் அநாதையாகியுள்ளார் என பொதுஜன பெரமுன கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.**



கிருலப்பனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். சிங்களவர்கள் பல்வேறு கட்சிகளுக்கு பிளவடைந்துள்ளமையினால் தீவிரவாத குழுக்கள் அதன் ஊடாக பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இம்முறை தேர்தலின் போது அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என ஞானசார தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விஞ்ஞான ஊக்கி நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரித் தாய்க்கு சமர்ப்பணமாக உள்ள விஞ்ஞான ஊக்கி தமிழ் மற்றும் ஆங்கில மொழி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட மாகாண கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை ஓய்வு நிலைப்பேராசிரியர் மா.சின்னத்தம்பி, சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம், யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, யாழ்.கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலைப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மற்றும் வடமாகாண மாகாணக் கல்வித்திணைக்கள விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி.கதிர்காமநாதன், வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி கல்வித்தர மேம்பாடு உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளை, கல்வி உப பீடாதிபதி எஸ்.சிவபாதம், நிதி நிர்வாக உபபீடாதிபதி பி.தனபாலன் , சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சி.நாகேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது நிகழ்வின் வரவேற்புரையினை யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் கு.வாகீசன், தலைமையுரையினை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம், ஆசியுரையினை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி மற்றும் வாழ்த்துரையினை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் வழங்கவுள்ளதுடன் பிரதம விருந்தினர் உரையும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்று பிரதிகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இதற்கமைய முதற்பிரதியை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ச.நாகேந்திரன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர். மேலும் சிறப்புப்பிரதி நூல்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (இ-5)

# கைதான நபர் விளக்கமறியலில்

பருத்தித்துறையில் சட்டவிரோத விபச்சார விடுதி ஒன்றை நடத்தி வந்த ஒருவர் நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போது எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி எதிரிக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தபட்ட இந்நபர் மோட்டார் சைக்கிள் கையாடல், சட்டவிரோதமான விபச்சார விடுதியை நடத்துதல், சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை கையாடுதல் போன்றவை தொடர்பான வழக்குகள் நீதிமன்றில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

விபச்சார விடுதி மற்றும் சட்டவிரோத மதுபான பாவனையும் இவ்விடுதியில் நடத்தப்பட்டு வந்தமை மக்களாலும், புலனாய்வு பிரிவினராலும் நீதிமன்றுக்கு தகவல் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப்பெரிய தோல்வி மகிந்தவுக்கு காத்திருப்பு

## ஐ.தே.க ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களின் போது ஹிட்லர் மற்றும் நெப்போலியன் அடைந்த தோல்விகளை விடவும் மிகப்பெரிய தோல்வியை மகிந்த ராஜபக்ஷ இம்முறை குருநாகல் மாவட்டத்தில் சந்திப்பாரெனெ ஐ.தே.க. பேச்சாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

கல்வி அறிவிலும் விழிப்புணர்விலும் சிறந்து விளங்கும் குருநாகல் மாவட்ட மக்களின் வாக்குகளை அபகரிப்பதென்பது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இயலாத காரியமென்றும் அமைச்சர் சூளுரைத்தார். அம்பாந்தோட்டையைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ, பரசூட் மூலம் குருநாகல் மாவட்டத்தில் வந்து குதித்தாலும், அவரது சாகசங்களைக் கண்டு குருநாகலை மாவட்ட மக்கள் ஏமாறமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது குடும்பத்தாரை காப்பாற்றும் நோக்கில் மகிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டையை விடுத்து குருநாகல் மாவட்டத்தை போட்டியிடுவதற்காக தெரிவு செய்திருக்கலாம். என்றாலும் அவர் அம் மாவட்டத்தில் தங்கமாட்டாரென்றும் எப்படியும் மெதமுலனவுக்கே திரும்பிச் செல்வாரென்றும் எமது மக்களுக்கு நன்கு தெரியும்.



நான் குருநாகல் மாவட்டத்திலேயே பிறந்து வளர்ந்தேன், நாம் கால் வலிக்குமளமவிற்கு ஒவ்வொரு கிராமமாக் ஏறி இறங்கியிருக்கிறேன்.

அம்மக்களின் தேவை என்னவென்பது எங்களுக்கு தெரியும். அவர்களின் நாடித்துடிப்பை நான் அறிவேன். மகிந்த ராஜபக்ஷவை அவர்கள் தோற்கடிப்பது உறுதி என்றும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையை போன்று சொல்வதை எல்லாம் நம்பும் மக்கள் கூட்டமே குருநாகலையிலும் இருப்பதாக அவர் நினைத்திருந்தால் அது தவறாகும்.

இதுவரை படித்து அறிந்திராத புது பாடத்தை மகிந்த ராஜபக்ஷ இம்முறை குருநாகல் மாவட்டத்தில் படிக்கப் போகிறார்.

இவர் மீது அதிருப்தி கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் எம்முடன் இணைந்த வண்ணமுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தலில் களமிறங்க பணம் வேண்டும்



(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மின்னஞ்சல் மூலம் பணம் சேகரிக்கும் நடவடிக்கையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் தான் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடுவதாகவும், இத்தேர்தல் முறையினால் பெரிய அளவிலான பணம் அதற்கு தேவைப்படுகின்றமையினால் குறைந்தது ஒரு இலட்சம் ரூபா பணமாவது தனக்கு வழங்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தனது நண்பர்களுக்கு மின்னஞ்சல் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த பணத்தொகையினை வழங்குவது சிரமம் என்றால் உங்களால் முடிந்த அளவு பணத்தொகையினை வழங்குவதற்கு அதிகபட்ச பங்களிப்பை செலுத்துமாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் அப்பணத்தொகையினை குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்கில் வைப்பு செய்யவும் அல்லது மின்னஞ்சல் ஊடாக தன்னுடன் தொடர்பு கொண்டால் சர்வதேச பணப்பரிமாற்ற வசதிகளை செய்து கொடுக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதம் தொடர்பில் வாசுதேவ நாணயக்கார தலைமை வகிக்கும் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணி செயலாளரிடம் வினவிய போது, இது ஒன்றும் புதிய விடயமல்ல.இதற்கு முன்னரும் இவ்வாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு தான் பணம் சேகரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதில் விசேடம் என்னவென்றால் இம்முறை மின்னஞ்சல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டமையே என அவர் கூறியுள்ளார். (இ-7)

# ஜனாதிபதியின் கருத்து கட்சியைப் பாதிக்கும்

## ஜனக பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்துக்கள் பொதுத்தேர்தலில் கட்சியின் வெற்றிக்கு பாதிப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பு மனு வழங்கப்படக்கூடாது என்ற நிலைப்பாடு தம்மிடமும் இருந்தது. எனினும் அது பின்னர் வழங்கப்பட்டது.



இந்தநிலையில் அவருக்கு வழங்கப்பட்ட வேட்புமனு தொடர்பில் தமக்கு விருப்பமில்லை என்று ஜனாதிபதி கூறியிருப்பது கட்சியின் தேர்தல் முடிவுகளை பாதிக்கும் என்று தென்னக்கோன் தெரிவித்தார். (இ-7)

# பொதுத்தேர்தலை இலக்கு வைத்து பரிசுப்பொருட்களை வழங்கத்தடை

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

பொதுத் தேர்தலில் வாக்குகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பரிசுப் பொருட்கள் மற்றும் அன்பளிப்புக்கள் வழங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பரிசுப் பொருட்கள், அன்பளிப்புக்கள் வழங்கி வாக்கு கோரும் வேட்பாளர்கள் தொடர்பிலான தகவல்களை வீடியோ படமெடுத்து பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்க முடியும்.

மின் அஞ்சல் ஊடாக இந்த வீடியோ ஆதாரங்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேரணிகள், சட்டவிரோத கூட்டங்கள், பதாகைகள், புகைப்படக் காட்சிப்படுத்தல், அச்சுறுத்தல்கள், போராட்டங்களை நடத்துதல் முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத தேர்தல் பிரசாரங்கள் தொடர்பில் பொலிஸாரும் ஆதாரங்களை திரட்டவுள்ளனர்.

இதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வீடியோ கமராக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரோந்துப் பணிகளில் ஈடுபடும் போது சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பில் வீடியோ காட்சிகளைப் பதிவு செய்து அதன் அடிப்படையில் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.



மற்றும் telligp@police.lk என்ற மின் அஞ்சல் முகவரிகள் மற்றும் 011 - 239 5605, 011 - 238 4024, 011 - 254 3811, 011- 238 7999 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக முறைப்பாடு செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்தவை தோற்கடிப்பது எமக்கு பெரிய விடயமல்ல

## கபீர் ஹாசிம் தெரிவிப்பு


(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுடைய மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்த எமக்கு வெறும் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பது பெரிய விடயமல்ல என அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி நாட்டு மக்களினால் மேற்கொள்ளப்பட்ட மௌனப் புரட்சியை எவராலும் எந்த சந்தர்ப்பத்திலும் தோற்கடித்துவிட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட தேசத்தை நேசிக்கும் சக்திகள் அதற்கு இடமளிக்காது.

நிறைவேற்று அதிகாரங்களுடன் ஜனாதிபதி தேர்தல் களத்தில் இறங்கிய மகிந்தவை நாம் தோற்கடித்தோம்.



அன்று அரச அதிகாரம், லஞ்ச ஊழல் மோசடிகளுடன் மகிந்த தேரதல் பிரசாரத்தை மேற்கொண் டார்.

எனினும், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் அவ்வாறான அதிகாரங்கள் இன்றி மகிந்த போட்டியிடுகின்றார்.

வெறுங்கையுடன் வரும் மகிந்த உள்ளிட்ட குழுவினை தோற்கடிப்பது அவ்வளவு கடினமான காரியமல்ல என கபீர் ஹாசீம் மாவனல்ல பிரதேசத்தில் வைத்து அண்மையில் இதனை தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண தடகளப் போட்டி சிறந்த பெறுபேறு பெற்றவர்கள் விபரம்

வடமாகாண கல்வித் திணைக் களம் நடத்தும் மாகாண மட்ட தட களப்போட்டியில் சிறந்த பெறு பேறுகளை பெற்ற போட்டியாளர் களின் விபரம் வருமாறு,

15 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி யின் ஜி.பிரவீன் 12.4 செக்கனில் ஓட்டத்தினை முடித்து தங்கப் பதக் கத்தினைப் பெற்றார்.

15 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான தட்டெறிதலில் யா/ ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பி. ஆனந்த் 42.10 மீற்றர் எறிந்து தங்கப்பதக்கத்தினைப் பெற்றார்.

17 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான 110 மீற்றர் தடைதாண் டல் போட்டியில் யா/ அருணோத யக் கல்லூரியைச் சேர்ந்த கே. நப்தலின் ஜெய்சன் 16 செக்கனில் தாண்டி தங்கப்பதக்கத்தினைப் பெற்றார்.

17 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான நீளம் பாய்தல் போட்டி யில் யா/ அருணோதயக் கல்லூரி யைச் சேர்ந்த கே. நப்தலின் ஜெய் சன்6.48 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தினைப் பெற்றார்.

19 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மன்/ அரிப்பு றோ.க.த. க.பாடசாலையைச் சேர்ந்த ஆர். எஸ்.லினோசன் லெம்பேர்ட் 22.5 செக்கனில் ஓட்டத்தினை முடித்து தங்கப்பதக்கத்தினைப் பெற்றார்.

19 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான நீளம் பாய்தல் போட்டி யில் யா/ ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.விதுர்சன் 6.43 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக்கத்தினைப் பெற்றார்.

21வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் யா/ மத்திய கல்லூரியைச் சேர்ந்த டி.ஜோய் ஆகாஷ் 57 செக்கனில் தாண்டி தங்கப்பதக்கத்தினைப் பெற்றார்.

21வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண் களுக்கான உயரம் பாய்தல் போட்டி யில் யா/இந்துக்கல்லூரியைச்சேர்ந்த கே. தனுசன் 1.92 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக்கத்தினைப் பெற்றார்.

15 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண் களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட் டியில் மன். கற்கிடந்தகுளம் றோ.க. .த.க பாடசாலையைச் சேர்ந்த ஏ. அனுஷலா 13.6 செக்கனில் ஓட்டத் தினை முடித்து தங்கப் பதக்கத் தினைப் பெற்றார்.

15 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண் க ளுக்கான நீளம் பாய்தல் போட்டி யில் மன். கற்கிடந்தகுளம் றோ.க.த.க பாடசாலையைச் சேர்ந்த ஏ. அனுஷலா 4.88 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தினைப் பெற்றார்.

17 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் யா/ வேம்படி பெண் கள் பாடசாலையைச் சேர்ந்த யு. மனலிதா 13.5 செக்கனில் ஓட் டத்தினை முடித்து தங்கப் பதக்கத் தினைப் பெற்றார்.

17 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் மு/ ஒட்டுசுட்டான் ம.வி யைச் சேர்ந்த வி. ஜெனிதா 5.01 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத் தினைப் பெற்றார்.

19 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண் களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டி யில் யாழ். இந்து மகளிர் கல்லூரி யைச் சேர்ந்த எஸ்.நிதர்சனா 13.6 செக்கனில் ஓட்டத்தினை முடித்து தங்கப் பதக்கத்தினைப் பெற்றார்.

19 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.அக ராணி, மு/வித்தியானந்தா கல்லூரி யைச் சேர்ந்த ஜே.நிதர்சனா 5.01 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத் தினைப் பெற்றனர்.

21 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண் களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டி யில் வட்டு. மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.கமலினி 13.4 செக் கனில் ஓட்டத்தினை முடித்து தங்கப் பதக்கத்தினைப் பெற்றார்.

21 வயதுப் பிரிவுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் வட்டு. மத்திய கல் லூரியைச் சேர்ந்த எம்.கமலினி 4.87 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக் கத்தினைப் பெற்றார். (க)

# யங்கம்பன்ஸ், கலைமதி ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது

கொலின்ஸ் விளையாட்டுக்கழ கத்தால் நடத்தப்படும் **Kings of Jaffna** கிண்ணத்திற்கான உதை பந்தாட்ட சுற்றுத் தொடரின் லீக் போட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் கொலின்ஸ் மைதா னத்தில் மின்னொளியில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

இப்போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்தப் போட்டியில் இரு அணியும் தலா ஒரு கோல்கள் போட்டு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. யங் கம்பன்ஸ்சார்பாகரதன்ஒருகோலைப் போட்டார். (க)





## கரணவாய் சோளங்கன் வி.கழக மாவட்ட ரீதியான கிரிக்கெட் போட்டி

### மாலுசந்தி மைக்கல் வெற்றி

கரணவாய்சோளங்கன்விளை யாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதி யாக நடத்தி வரும் அணிக்கு 12 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி யில் வதிரி சிறிமுருகன் அணியை வெற்றிபெற்று அடுத்த சுற்றுப் போட்டிக்கு மாலுசந்தி மைக்கல் அணி தகுதி பெற்றுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் மோதியது.

இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய மைக்கல் அணி தர் சனின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 12 ஓவர்களில் 128 ஓட்டங்க ளைப் பெற்றது.

இதில் தர்சன் 53, ரகுவரன் 47, பீபிலிகன் 12 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடு த்தனர். பதிலுக்கு ஆடிய வதிரி சிறிமுருகன் அணியினர் 12 ஓவர் களில் சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. மைக்கல் அணி சார் பாக பந்துவீச்சில் தர்சன் 3, தினோஜன, பீபிலிகன், பிரசாந் ஆகி யோர் தலா 2, அச்சுதன் 1 விக் கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இறுதியில் 18 ஓட்டங்களால் மைக்கல் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றது. சோளங்கன் 5 ஓவர் கிரிக்கெட் தொடரில் இறுதிப் போட் டியில் ஞானம்ஸ் அணியை எதிர் த்து மைக்கல் அணி மோத வுள்ளது. (க)

# வடமாகாண முதற்தர வீராங்கனையாக ஒட்டுசுட்டான் மகா வித்தி மாணவி தெரிவு



வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான 2015 ஆம் ஆண் டுக்கான தடகளப் போட்டியில் முல் லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டு சுட்டான் மகா வித்தியாலய மாணவி செல்வி விக்டர் ஜெனிற்றா வட மாகாணத்தின் முதற்தர வீராங்கனை க்கான விருதினைப் பெற்றுள்ளார்.

இவர் நீளம்பாய்தலில் முன்னைய பதிவாக இருந்த 4.98 மீற்றர் என்ற பதிவை முறியடித்து 5.01 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையைப் பதி வாக்கினார். இதற்கான இவர் தங் கப்பதக்கமும் வர்ண விருதையும் பெற்றுக்கொண்டார்.

முப்பாய்ச்சலில் 10.41 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கமும் வர்ண விருதையும் 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் வட மாகாணத்தின் 17 வயதுப் பிரிவில் சிறந்த களவீரருக்கான விருதினை யும் வடமாகாணத்தின் முதற்தர வீராங்கனைக்கான விருதையும் பெற்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகிய பழங்களில் அதைக் கொள்ளுவோம்,
இதைத் தள்ளுவோம் என்று தேர்வது எப்படி?
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உதிர்ந்த பிட்டுக் கேட்ட சிவன் தேர்தலில் போட்டியிட்டால்...

வைகை ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. அணை கட்டுமாறு பாண்டிய மன்னன் நாட்டு மக்களுக்கு அறிவிக்கின்றான். மந்திரியாக இருந்த மாணிக்க வாசகரை சிறையில் அடைத்ததால் சிவன்கொண்ட கோபத்தின் காரணமாகவே வைகை ஆற்றின் பெருக்கு நடக்கிறது.

பெருக்கெடுக்கும் வைகை நதிக்கு அணையிடு மாறு மன்னன் இட்ட கட்டளையை நிறைவேற்ற மக்கள் முண்டியடிக்கின்றனர். அவரவருக்கு ஒதுக்கப் பட்ட அளவு அணையைக் கட்டியாகவேண்டும்.

எனினும் பாண்டிய நாட்டில் வாழும் செம்மனச் செல்வி என்ற மூதாட்டிக்கு அணையைக் கட்ட யாரு மில்லை. பிட்டு அவித்து விற்றுத் தன் சீவியம் நடத்தும் அந்த மூதாட்டி செண்பகப்பெருமானின் கோவில் சென்று, தாயுமிலி தந்தையிலி தமியேனைப் பேயிடை நின்றாலும் பிரித்தெறிய எண்ணாத யாருமற்ற ஏழை. மன்னனிட்ட கட்டளையை நீயே நிறைவேற்ற வேண்டும் என்று மன்றாடுகிறாள்.

செம்மனச்செல்விக்கு உதவ செண்பகப்பெருமான் திருவுளம் கொண்டார். ஒரு கூலியாள் வேடத்தில் தோளில் மண்வெட்டியோடு செம்மனச்செல்வியின் வீட்டுக்கு செல்கிறார்.

கூலியாளரைக் கண்ட செம்மனச்செல்வி மிக்க மகிழ்ச்சியோடு தனக்கு உரித்ததான அணையைக் கட்டித் தருமாறு அந்தக் கூலியாளிடம் கேட்க, அதற்கு அவர் சம்மதிக்கிறார்.

சரி, நான் அணையைக் கட்டுவதற்கு என்ன கூலி தருவாய் பாட்டி? என்று வினவுகிறார் கூலியாள். என்னிடம் எதுவுமில்லை. பிட்டு அவித்து விற்று சீவியம் நடத்துகிறேன். வேண்டுமானால் உண்பதற்கு பிட்டுத் தருகிறேன் என்கிறார் செம்மனச்செல்வி.

எவ்வளவு பிட்டு என்ற கேள்வியோடு மீண்டும் சிக்கல். சிக்கலை நீக்க ஓர் இணக்கப்பாட்டிற்கு வரும் பொருட்டு உதிர்ந்த பிட்டு எல்லாம் எனக்கென் கிறார் கூலியாள். செம்மனச்செல்வி அதற்கு சம் மதிக்கிறார்.

முன்பெல்லாம் பிட்டு, பிட்டுக்குழலில் அவிப்பது. அதனால் குழல்பிட்டு என்று அதற்கு அடைமொழி யும் உண்டு. விற்பனையின் பொருட்டு குழல்பிட்டு முறைமை வந்திருக்கலாம். குழல்பிட்டுக்கு இடையி டையே தேங்காய்ப்பூ, அவித்த பிட்டை குழலில் இருந்து உதிராமல் எடுப்பதும் ஒரு திறமை.

உதிர்ந்த் பிட்டை கூலியாகத் தரலாம் என்று சம் மதித்த செம்மனச்செல்விக்கு பேரதிர்ச்சி. அவிக்கின்ற பிட்டெல்லாம் உதிர்ந்து விடுகிறது. என்ன செய்வது? நிபந்தனையின்படி உதிர்ந்த பிட்டு கூலியாளுக்கு வழங்கப்படுகிறது.

கூலியாளராக வந்து, பிட்டை உதிரவைத்து, தன் திருவிளையாடலைக் காட்டுகின்ற செண்பகப் பெருமான் யாழ்ப்பாணம்–கிளிநொச்சி தேர்தல் மாவட்டத் தில் வேட்பாளராக நின்றால் எப்படி வெற்றியைத் தனதாக்குவார் என்று சிந்தித்தோம். பிரசாரம் எதுவும் செய்யமாட்டார். யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரைச் சந்திப்பார். சந்தித்து பொதுத் தேர்தலில் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் செல்லுபடியற்ற வாக்குகள் அனைத்தும் எனக்குத் தரவேண்டும் எனக் கேட்பார்.

அட, செல்லுபடியற்ற வாக்குத்தானே! அதைக் கொடுத்துவிடலாம் என்று தெரிவத்தாட்சி அதிகாரி தீர்மானித்தால், தேர்தல் முடிவில் செண்பகப்பெருமானுக்கே அதிக விருப்பு வாக்குகள். அவர் வெற்றி பெறுவது மட்டுமன்றி, செல்லுபடியற்ற வாக்குகளின் அதிக எண்ணிக்கையால் தேசியப் பட்டியலிலும் அவர் தரப்புக்கு இடம் கிடைக்கலாம். அட, இதெல்லாம் உதிர்ந்த பிட்டுத் தியரி.

தேர்தல் அதிகாரிகளே! செல்லுபடியற்ற வாக்குகளைத் தவிர்க்க ஏதாவது பிரசாரம் செய்யுங்கள். கடந்த முறைபோல் இம்முறையும் ஏகப்பட்ட செல்லுபடியற்ற வாக்குகள் வேண்டாம். நடவடிக்கை எடுங்கள்.

## யாழ்.நீதிமன்றத் தாக்குதல்

# மாணவன் ஒருவருக்கு பிணை அனுமதி; ஏனையோரது பிணை மனு நிராகரிப்பு

நீதிமன்றம் தாக்கப்பட்டமை மற்றும் பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளை வித்தமை தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களில் மாணவன் ஒருவரை யாழ்.நீதவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியதுடன் ஏனையவர்களுக்கான பிணை விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டது.

குறித்த வழக்கு யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் பி.சிவகுமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நேற்றைதினம் சந்தேகநபர்கள் 30 பேர் மன்றுக்கு முன்னிலையாகியிருந்தனர். மேலும், மூன்று வழக்குகள் இவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்குகளை விசாரணை செய்த நீதவான் குறித்த மூன்று வழக்கில் இருந்தும் நடைபெறவுள்ள க.பொ.த உயர் தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவனுக்கு நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த மாணவன் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐந்து ஆட்பிணையில் செல்லலாம் என்றும் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரினால் உறுதி செய்யப்பட்ட கடிதம் மன்றிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. அத்துடன் நன்னடத்தை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் எதிர்காலத்தில் ஏதாவது குற்றங்கள் செய்தால் பிணை நிராகரிக்கப்பட்டு வழக்கு முடிவுறும் வரை பிணை வழங்கப்படாது என்றும் நீதவான் தெரிவித்தார்.

ஏனைய 29 சந்தேகநபர்கள் தொடர்பில் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிணை விண்ணப்பங்களில் விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் இல்லை என்றும் இதனால் பிணை வழங்க முடியாது எனவும் பிணை தேவையெனின் மேல் நீதிமன்றத்தை நாடலாம் என்றும் தெரிவித்து விண்ணப்பங்களை நீதவான் நிராகரித்தார்.

குறித்த 29 பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் வாகன விடுவிப்புக்கு அனுமதி கோரியவர்களின் மோட்டார் சைக்கிள் 2இலட்சம் ரூபாய் பிணை முறியிலும் முச்சக்கரவண்டி 3 இலட்சம் ரூபாய் பிணை முறியிலும் பெற மன்று அனு மதி வழங்கியது. எனினும் வழக்கு முடியும்வரை கைமாற்றவோ விற்கவோ முடியாது என்றும் மன்று அறிவித்துள்ளது. (செ–11)

# க.பொ.த உயர்தரம்-2015 அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த உயர்தரம் 2015ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெய்வ வழிபாட்டுடன் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்கள் அனைவரும் கல்லூரிச் சீருடையுடன் சமுகமளிப்பதுடன் பெற்றோர்களும் வருகை தர வேண்டும் என கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ–5)

# சுயேட்சைக் குழுக்களுக்கு சின்னங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்திலிருந்து போட்டியிடும் சுயேட்சைக்குழுக்களுக்கான சின்னங்கள் தேர்தல் திணைக்களத்தினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி தம்பிப்பிள்ளை இதயராணி தலைமையிலான சுயேட்சைக் குழு 01 இற்கு கிளி சின்னமும், பர்னாந்து ஜோசப் அன்ரனி தலைமையிலான சுயேட்சைக்குழு 02 இற்கு அரிவாளும் தில்லைநாதன் சாந்தராஜ் தலைமையிலான சுயேட்சைக்குழு 03 இற்கு வண்டில் சின்னமும், நடேசபிள்ளை வித்தியாதரன் தலைமையிலான சுயேட்சைக்குழு 04 இற்கு சிலந்தி சின்னமும், ஆனந்தசங்கரி ஜெயசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு 05 இற்கு பட்டம் சின்னமும், ஜெயபாலா ஜெயசுலக்ஷன் தலைமையிலான சுயேட்சைக்குழு 06 இற்கு கேடய சின்னமும் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல் திணைக்களத்தினால் சுயேட்சைக்குழுக்களிற்கு வழங்கப்பட்டுள்ள சின்னங்களிலேயே தேர்தலில் அவர்கள் போட்டியிட முடியும்.

மேலும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு 12 சுயேட்சைக் குழுக்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்த போதிலும் 06 சுயேட்சை குழுக்களில் வேட்பு மனுக்களே ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ–4)



# சத்திய தரிசனம்

## அன்பு ஜோதி விரியட்டும்

❖ தேனும், கடல் நீருமாக ஆன்மிகமும், உலக ஆசைகளும் தற்காலத்தில் மனித வாழ்வில் கலந்து கொண்டிருக்கிறது.

❖ புத்தியில்லாத முட்டாள், மூக்கில்லாத முகமாக விகாரமாக காட்சியளிப்பான்.

❖ சிந்தித்ததை எல்லாம் பேச வேண்டாம். யோசித்து தேர்ந்தெடுத்த வார்த்தைகளைப் பேசுங்கள்.

❖ மனிதனைத் தாக்கும் ஆயுதம் போன்றது நாக்கு. நாக்கினால் உண்டான காயம் எளிதில் ஆறுவதில்லை.

❖ உங்களை நீங்களே புகழ்ந்து கொள்ள வேண்டாம்.

❖ ஒரு விளக்கிலிருந்து இன்னொரு விளக்கு ஏற்றுவது போல, அன்பு ஜோதி விரிந்து கொண்டே செல்லட்டும்.



# அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத்தகவல்கள்

## உருத்திராட்சத்தை அணிந்து சிவபெருமானை வணங்குவதால் நடக்கும் நன்மைகள் யாது?

இப்பூவுலகில் பிறக்கும் உயிர்கள் யாவற்றிற்கும் எமலோகத்தில் சித்ரகுப்தன்தான் பாவ புண்ணிய கணக்குகளை எழுதுகிறான்.

அதேசமயத்தில் பூலோகத்தில் ருத்ராட்சம், திருநீறு ஒருவர் அணியப் போகிறார் என்றால் அது அரை மணி நேரத்திற்கு முன்பாகவே எமலோகத்திற்கு தெரிந்துவிடும்.

அப்போது அவர்களின் பாவ புண்ணிய கணக்குகளை சித்ரகுப்தன் கொண்டு சென்று சிவனையே முக்காலமும் போற்றி வணங்கிக்கொண்டிருக்கும் சிவகணங்களிடம் ஒப்படைத்துவிடுவான். அதன்பிறகு அவரின் பாவ புண்ணிய கணக்குகள் சிவகணங்களின் மூலமாக கொன்றையணிந்த சிவபெருமானின் நேரடிப் பார்வைக்கு சென்றுவிடும்.

முன்ஜென்மத்தில் பாவ புண்ணிய வினைப்படிதான் அந்தந்தக் கால நிலைகளில் சித்ரகுப்தனால் செய்ய இயலும். அதில் கூட்டிக்குறைத்தோ ஏற்றி இறக்கியோ ஏதும் செய்ய இயலாது. அஃதே சிவபெருமானின் நேரடிப் பார்வைக்கு செல்லும் போது ஒரு சில பாவக்கணக்கின் தண்டனைகள் குறைக்கப்படுகின்றது.


இந்த ஜீவனில் உயிர் குடிகொண்டுள்ளது. ஏனென்றால் அது முன் ஜென்மத்து பாவ புண்ணிய கர்மாக்களை அனுபவித்து ஆத்மாவானது தனது ஆத்ம தந்தையான சிவபெருமானை சென்றடைய வேண்டும் என்பதுதான். ஆனால் நாம் அதை மறந்து உலக மயக்கத்தில் உழன்றுசுழல்வதனால்தான் மீண்டும் மீண்டும் பிறந்து, இறந்து கொண்டேயிருக்கும்.

அதேசமயம் இப்போது ஆத்ம தந்தையான சிவபெருமானை நினைக்க தொடங்கிவிட்டால் விதியை வகுத்த சிவனே இந்த ஆன்மா அதனுடைய உண்மை பாதைக்குச் சரியாக வர ஆரம்பித்துவிட்டது என பல சலுகைகளை கொடுக்க ஆரம்பித்துவிடுவார்.

கோள்களையும் நாள்களையும் சுவாமிதான் உருவாக்கியுள்ளார். அவைகள் சிவபெருமானுக்கு கட்டுப்பட்டவைகள். அவரை மீறி அவைகளால் ஏதும் செய்ய இயலாது. அதே சமயத்தில் திருநீறு, உருத்திராட்சம் தரித்தவர்களை, அவரை மட்டுமே வணங்குபவர்களை சிவபெருமானின் அனுமதியின்றி அவைகள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட 2மில்லியன் ரூபா நிதியிலிருந்து பிரம்படி பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருவதைப் படத்தில் காணலாம்.

## மீனவரின் சடலம் நேற்று மீட்பு

வடமராட்சிக்கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் மீனவர் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது. கரைவலை ஒன்றில் தொழில் புரிபவரான உடப்பு பூனைக் குட்டியைச் சேர்ந்த விஜய் (வயது-30)என்ற இளம் குடும்பஸ்தரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை சுண்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பளைப்பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவருக்கு 3 வயதுடைய மகன் ஒருவர் இருப்பதாகவும் மனைவி தொழில் நிமிர்த்தம் காரணமாக அரபுநாடு சென்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-5-64)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள்கட்டுமான வாழ்வாதார உதவித் திட்டம்

## இன்றிலிருந்து ஆரம்பிக்கப்படுகிறது என்கிறார் வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன்

**வடமாகாணத்தில் கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீள்கட்டுமான வாழ்வாதார உதவித்திட்டம் இன்றில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமாகாண சபை மீன்பிடி,போக்குவரத்து மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண மீன்பிடி அமைச்சின் செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வடமாகாணத்தில் ஒட்டுமொத்தமாகவே அனைவரும் இந்த யுத்தத்தினால் ஏதோ ஒரு வகையில் பாதிப்படைந்துள்ளனர். குறிப்பாக உயிரிழப்பு, சொத்து இழப்பு போன்றவற்றால் எமது மக்கள் மனதளவிலும் பொருளாதார ரீதியிலும் மிகவும் நலிவுற்ற நிலையில் காணப்படுவது யாவரும் அறிந்த விடயம்.

ஆகவே 2014 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட எனது நிதியில் அதிகளவான நிதி கிராமங்களின் உட்கட்டுமான வேலைகளுக்கும் அவர்களின் வாழ்வாதார நலத்திட்டங்களிற்கும் பயன்படுத்தப்பட்டது எமது மக்களாகிய நீங்கள் யாவரும் அறிந்த விடயம். இந்த யுத்தத்தின் வாயிலாக எமது மக்கள் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்ட நிலையில் நான் எனது அமைச்சுப்பொறுப்பை பதவியேற்றதன் பின்னர் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள கிராமங்களிற்கு செல்கின்ற போது மிகவும் எனது மனதைப் பாதித்த விடயமாக காணப்படுவது எமது இனத்திற்காக பல தியாகங்களை செய்த நபர்கள் அன்றாட உணவிற்கு கையேந்த வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். ஆகவே இவர்களை பொருளாதாரத்தில் ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டுக்கான எனது கொள்கைப் பிரகடனமாக பின்வருவோருக்கான வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்க வேண்டும் என்று முன்னுரிமை அடிப்படையில் சில முக்கியமான நபர்களை பொருளாதாரத்தில் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அதன் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஐந்து மாவட்டங்களிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டு தற்போது அந்த வாழ்வாதார வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளேன். குறிப்பாக மூன்று படிவங்கள் எமது கிராம அபிவிருத்தி திணைக்களத்தினூடாக வழங்கப்பட்டன.

படிவம் 1 - புனர்வாழ்வளிக்கப்பட்ட குடும்பங்களுடன் வசிக்கும் போராளிகளின் தரவுப் படிவம்

படிவம் - 2 யுத்தத்தால் உயிரிழந்த போராளிகளின் குடும்ப விபரம்

படிவம் - 3 தடுப்புக் காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரத்திரட்டுப்படிவம்

அதன் அடிப்படையில் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி இந்த படிவங்களினை சேகரிப்பதற்கான இறுதித் தினமாக அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு ஏறக்குறைய 12 ஆயிரத்து 676 படிவங்கள் எமது திணைக் களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன. குறிப்பாக ஐந்து மாவட்டங்களிலுமிருந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு குடும்பங்களுடன் வசிக்கும் 6 ஆயிரத்து 322 படிவங்களும் யுத்தத்தால் உயிரிழந்த போராளிகளின் குடும்ப விபரங்கள் 6 ஆயிரத்து 30 படிவங்களும் தடுப்புக் காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரப் படிவங்கள் 324 படிவங்களும் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வேலைத்திட்டத்திற்காக எனது அமைச்சினால் 43 மில்லியன் நிதியனை ஒதுக்கி இருக்கிறேன்.

குறிப்பாக மேற்படி ஒதுக்கீடானது ஒப்பீட்டளவில் பாரியளவில் இருக்கிறது. கிடைக்கப் பெற்றுள்ள தரவுகளோடு ஒப்பிடும் போது ஒரு கணிசமான அளவே இவ்வாண்டு பூரணப்படுத்த முடியும். இருப்பினும் என்னை நம்பி விபரப்படிவத்தினை அனுப்பி வைத்த ஒவ்வொருவருக்கும் வாழ்வாதார உதவிகளை செய்ய ஆவலாய் இருக்கின்றேன்.

அதன் பொருட்டுமேலதிக நிதியினை சில தூதரகங்களும், எமது புலம்பெயர் மக்களும் இதற்கு உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர். ஆகவே கட்டம் கட்டமாக இவர்களுக்கான வாழ்வாதார நலத்திட்டங்களை முன்னெடுப்பதோடு நாம் செய்கின்ற வாழ்வாதார திட்டமானது குறிப்பிட்ட நபர்களுக்கு ஒரு நிரந்தர வருமானத்தை பெற்றுத்தரக் கூடியதாகவும் ஒரு நிலையான அபிவிருத்தியை கொண்டுவருவதாகவும் இருக்க வேண்டும்

ஆகவே முதற் கட்டமாக குறிப்பாக கணவன் மனைவி இருவரும் சேர்ந்து உழைத்து தமது குடும்பத்தின் தேவைகளை ஈடுசெய்ய முடியாத வேளையில் கணவர் சிறைகளில் இருப்பதனால் மிகவும் மனதளவிலும் பொருளாதார ரீதியிலும் பாதிப்படைந்து காணப்படுகின்றனர். எனவே தடுப்புக் காவலிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 324 குடும்பங்கள் முற்றுமுழுதாக இவ்வாண்டு வேலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட இருக்கின்றார்கள்.

மற்றும் தமது அவயவங்கள் நல்ல நிலையில் இருக்கின்றவர்களே தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவது கடினமாக உள்ள போது அவயவங்களை இழந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியமானதாகும்.

ஆகவே கிடைக்கப்பெற்ற படிவங்களின் அடிப்படையில் பாதிப்பின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அக்குடும்பங்கள் இவ்வாண்டு வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

கணவனை இழந்த பெண போராளிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்குடன் இவ்வாண்டு வேலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட உள்ளனர்.

குறிப்பாக இவர்களுக்கான வேலைத்திட்டமாக சிறுகைத்தொழில் பேட்டைகளை அமைத்து வேலைவாய்ப்பினை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.மேலும்

கடற்தொழில் சார் உபகரணங்கள் வழங்கல் - 30 தொகுதி 3 மில்லியன், விவசாய உபகரணங் கள் வழங்கல் - 30 தொகுதி 3 மில்லியன், உணவு உற்பத்தி சார் உபகரணங்கள் வழங் கல்- 30 தொகுதி 3 மில்லியன், சாதாரண மற்றும் தொழில் சார் தையல் இயந்திரங்கள் வழங்கல் - 4 மில்லியன், ஆடு வளர்ப்பு - 5 மில்லியன், மாடு வளர்ப்பு - 5 மில்லி யன், கோழிவளர்ப்பு - 3 மில் லியன், காளான் பயிர்ச் செய்கை - 1 மிலலியன், பாசி வளர்ப்பு - 1 மில்லியன், மரவேலை தொழிற் பேட்டை -5 மில்லியன், வட்டு மின்னிணைப்பு நிலை யம் - 5 மில்லியன், அலுமினிய வேலைசார் தொழிற்கூடம்-5 மில்லியன், சிறுகைத்தொழில் முயற்சிகள் என்பனவற்றுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# வடக்கு மாகாண விவசாய அமைச்சினது பனை அபிவிருத்தி வாரத்திற்கு வரவேற்பு

## அகில இலங்கை காந்திசேவா சங்கம் அறிக்கை

கற்பக தரு நாயகன் மில்க்வைற் கனகராசாவின் நினைவு தினமான ஜுலை 22 ஆம் திகதியை ஆரம்பமாகக் கொண்டு ஒருவார காலத்தை பனைஅபிவிருத்திவாரமாகதங்களுடைய அமைச்சு பிரகடனம் செய்துள்ளமையானது வரவேற்கப்படக்கூடியதொன்றாகும்.ஒவ்வோர் ஆண்டும் மில்க்வைற் கனகராசாவின் நினைவு தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்துவரும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரான நாமும் தங்களது இந்த முன்மாதிரியான தூர நோக்குடைய சிந்தனையை மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

பனை அபிவிருத்தி வாரத்தில் நாங்கள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கும் அவை எதிர் காலத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதற்கும் எமது சங்கத்தால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குவோம்.


மில்க்வைற் கனகராசா அவர்களின் கனவை நனவாக்கும் தங்கள் முயற்சி வெற்றி பெற எமது சங்கத்தின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயற்கைச் சூழலின் சமநிலையைக் காத்து நிற்கின்ற பனைவளத்தை அழியாது பேணுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதி பூணுவோம் என அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (இ)

## கற்பித்தல் கண்காட்சி

யாழ்.உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் கற்பித்தல் உபகரணக்கண்காட்சி இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பாடசாலை மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் சு.சண்முககுலகுமார், கௌரவ விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.கமலராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)



சாவதேச பாடசாலைகளுக்கிடையிலான 2014 - 2015 ஆம் ஆண்டுக்கான விருதுவழங்கல் நிகழ்வில் யா/புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம் அகில இலங்கை ரீதியில் முதல் பத்து இடங்களுக்குள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. பிரிட்டிஸ் கவுன்சில் நிறுவனத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியில் 143 பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட இச் சர்வதேசப் போட்டியில் பல பாடசாலைகள் சிறப்புத் தெரிவினை பெற்றிருந்த போதிலும் அகில இலங்கை ரீதியில் யா/புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம் முதல் பத்துசிறந்தபாடசாலைகளுக்குள் தெரிவுசெய்யப்பட்டு அதற்கானவிருதும்,வெற்றிச் சான்றிதழும் அண்மையில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. மேலும்யாழ் மாவட்டத்திலிருந்து இப் போட்டிக்கு பங்குபற்றிய பாடசாலைகளில் முதல் பத்து இடங்களுக்குள் இப்பாடசாலைதெரிவுசெய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை வீழ்த்தி பழிதீர்த்தது இலங்கை

## குசல் பெரேரா அதிரடி



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் தம்புள்ளையில் நடந்த முதல் ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் 6 விக்கெட் வித்தியாசத்தில் எளிதான வெற்றியை பெற்றது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையேயான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று பல்லேகேலவில் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய அணித்தலைவர் அசார் அலி, ஷேசாட் ஓரளவு நல்ல தொடக்கம் கொடுத்தனர். ஷேசாட் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஹபீஸ் (9) வந்த வேகத்தில் நடையை கட்டினார்.

பாபர் (12) நிலைக்கவில்லை. மாலிக் (51), ரிஸ்வான் (52) சிறப்பாக விளையாடி அரைசதம் அடித்தனர்

சர்பிராஸ் (7), யாசிர் ஷா (1) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, 50 ஓவர்கள் முடிவில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்கு 287 ஓட்டங்கள் எடுத்தது.

அன்வர் (29), ரஹாட் அலி (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை சார்பில், மலிங்க, பதிரனா தலா 2, மத்யூஸ், பிரதீப், சிறிவர்தன, டில்ஷான் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் 288 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.1 ஓவர்களில் 8 விக்கெட்டினை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அதிரடியாக விளையாடிய குசல் பெரேரா 25 பந்துகளில் 68 ஓட்டத்தினையும் சந்திமல் ஆட்டமிழக்காது 48 ஓட்டத்தினையும் டில்சான் 47 ஓட்டத்தினையும் பெற்றார்.

போட்டியின் நாயகனாக இலங்கை அணியின் குசல் பெரேரா தெரிவானார். (க)



## 16 பவுண் நகை உட்பட ரூபாய் 90 ஆயிரம் திருட்டு

(வேலணை)

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் பட்டப் பகலில் வீடு உடைத்து உட்புகுந்த திருடர்கள் 16 பவுண் நகையுடன் 90 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று நண்பகலில் வேலணை 6ஆம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் குறித்த வீட்டின் உரிமையாளரான முத்தையா முருகையா என்பவரினால் ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

## வாக்குச் சீட்டு...

இம்முறை பொதுத் தேர்தலில், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் அதிகளவில் போட்டியிடுவதால், வாக்குச்சீட்டு நீளமானதாக இருக்கும் எனவும் காமினி பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## சுதந்திரக் கட்சி...

பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு வரும் 17ஆம் பதிலளிப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விஷேட கூட்டமொன்றுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்திற்கு வந்திருந்த மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்படுவார் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மைத்திரி மதிவியூகம்...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறிய 5 உறுப்பினர்களின் அங்கத்துவத்தை இரத்துச் செய்யுமாறு கட்சியின் மத்திய செயற்குழுவிடம் மத்திய செயற்குழுவின் செயலாளர் திலங்க சுமதிபால கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனடிப்படையில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துகொண்டு ராஜித சேனாரத்ன, எம்.கே.எஸ்.டி குணவர்தன, ஹிருணிகா பிரேமச்சந்திர, அர்யூன ரணதுங்க, வடிவேல் சுரேஷ் ஆகியோரை கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றிரவு கூடும் என அந்த கட்சியின் பொதுச் செயலாளர் அனுரபிரிதர்ஷன யாப்பா அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழுவின் கூட்டம் நடத்துவதைத் தடைசெய்யும் மேற்படி உத்தரவொன்றை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று புதன்கிழமை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளரான பிரசன்னா சோலங்க ஆராச்சி தாக்கல் செய்த மனுவொன்றை ஆராய்ந்த நீதிமன்றம் இந்த தடைஉத்தரவை பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பிற்கு அமைய கட்சியின் மத்தியக்குழுவின் கூட்டங்களை அழைக்கும் அதிகாரம் கட்சித் தலைவரான மைத்திரிபால சிறிசேனவுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாக இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்று (நேற்று) கட்சித்தலைவரின் அனுமதியின்றி மத்தியகுழுக் கூட்டத்தை கூட்டுவதற்கு கட்சியின் செயலாளர் அனுரா பிரியதர்ஷன யாப்பா தீர்மானித்துள்ளதாகக் கூறிய மனுதாரர் இந்த கூட்டம் சட்டவிரோதமானதென்று தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

எனவே அதனைத் தடைசெய்யும் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஜூலை மாதம் 29ஆம் திகதி வரை கட்சித் தலைவரின் அனுமதியின்றி மத்திய குழுக் கூட்டங்களை அழைப்பதைத் தடை செய்யும் உத்தரவையும் பிறப்பித்தார்.

நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட அனுமதியளிக்கப்பட்டிருப்பதை மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக எதிர்த்திருக்கும் பின்னணியில், அவருக்கும் மகிந்தவுக்கும் இடையிலான உட்கட்சி மோதல் இந்த வழக்கின் மூலம் நீதிமன்றம் வரை சென்றிருக்கிறது.

இந்நிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றின் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எப்படி பதவியில் இருந்து அகற்றுவது என்பது குறித்து மகிந்த ஆதரவு தரப்பை சேர்ந்த பேராசிரியர் நளின் டி சில்வா நேற்று குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நாராஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இத்னை கூறியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவை முதலில் கட்சியின் மத்திய குழுகூட்டத்தை கூடி கட்சியின் தலைவர் பதவியிலும் உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்குவோம்.

தேர்தலின் பின்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குபலத்தில் நம்பிக்கையில்லாத் தீமானம் மூலம் சிறிசேனவை இலகுவாக ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்குவோம்.

எற்கெனவே அதற்கு தேவையான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் நளின் டி சில்வா இதன்போது தெரிவித்தார். (செ-11)

## அனைத்திலும்...

லாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணிக் கட்சி தலைவர்களின் கூட்டத்திற்கு பின்னர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் 260 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நான், தினேஷ் குணவர்தன, அனுரபிரிய தர்ஷன யாப்பா ஆகியோர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பை வழங்க இணக்கம் காணப்பட்டது.

தேர்தல் பிரசார நடவடிக்கை குழுவின் தலைவராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்கவும் ஜனாதிபதி இணங்கினார். இதனடிப்படையில் அதனை கடந்த 3 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்தோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இணக்கத்திற்கு அமையவே நான் அறிவிப்பை வெளியிட்டேன்.

வேட்புமனுவை தயாரிப்பது, தேர்தல் ஆணையாளருடன் செயற்பாடுகளை முன்னெடுப்பது கட்சியின் செயலாளர்.

தேசியப்பட்டியலில் பெயர் இல்லாத, தேர்தலில் போட்டியிடாத எவரையும் வெற்றிடமான தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்க முடியாது.

அதேவேளை மத்திய வங்கியின் ஆளுநர் மீது குற்றம் இருப்பது ஜனாதிபதியின் உ[illegible] தெளிவாகியுள்ளது.

பொதுப் பரீட்சைகள் நடைபெறும் போது தேர்தல்கள் நடத்தப்படுவதில்லை. எனினும் இம்முறை உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் போது பொதுத் தேர்தல் நடத்தப்படுகிறது. ஒரு சதம் என்றாலும் பிள்ளைகளுக்கு முக்கியமானது.

பிரதமரை காப்பாற்றும் எண்ணத்தில், பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்தில் கொள்ளாது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரை காப்பாற்ற பிள்ளைகளின் எதிர் காலத்தை அடகு வைக்கும் அரசாங்கம் ஒன் றின் மூலமான எதிர்கால பலன் என்ன?. ஆகஸ்ட் 18 ஆம் திகதி நாங்கள் நிச்சயமாக அரசாங்கத்தை அமைப்போம் என சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரிய தர்ஷன யாப்பா,

ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிப்பது எமது பிரதான நோக்கம். இளைஞர் சேவைகள் மன்றத்தின் 52 வாகனங்களை அரசாங்கம் தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தி வருகிறது.

அரச ஊடகங்கள் தற்போது ஒரு பக்கத்தை சார்ந்துள்ளது. எமது காலத்தில் மிக குறைந்த அளவிலேயே அரச வாகனங்களை தேர்தலுக்கு பயன்படுத்தினோம்.

டளஸ் அழகபெரும் வேட்புமனு தாக்கல் செய்து விட்டு மாவட்ட செயலகத்தில் இருந்து வெளியேறும் போது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது. சில அமைச்சர்கள் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பை பயன்படுத்தி வருகின்றனர். எவ்வாறாயினும் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கியப்பட்டுள்ளது என அனுர பிரியதர்ஷன யாப்பா குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்த மீண்டும்...

களில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தி ஆரூடங்களை வெளியிட்ட கண் பார்வையற்ற ஜோதிடர் இந்திக தொட்டவத்த, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைவார் என்பதைஉறுதியாக கூறியிருந்தார்.

மகிந்தராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவார் என்று பகிரங்கமாக ஆரூடம் கூறிய ஒரேஜோதிடரும்இவரே.

தாம் எப்போது உண்மையையே கூறுவதாகவும் பணத்தை சம்பாதிக்கும் நோக்கில் ஆரூடங்களை தான் விற்பனை செய்வதில்லை எனவும் தொட்டவத்த குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், நான் மக்களை ஏமாற்ற மாட்டேன். நான் மக்களின் எதிர்காலம் குறித்த தகவல்களை வெளியிடுவேன்.

நாட்டில் தம்மை ஜோதிடர்கள் என்று கூறிக்கொள்ளும் நபர்களை போல் பணத்திற்கு ஆசைப்பட்டு மகிந்தராஜபக்ஷவுக்காக பொய்யான ஜோதிட ஆரூடங்களைகூறமாட்டேன்.

மகிந்த ராஜபக்ஷவின் கிரக பலம் சிறப்பாக இருப்பதாகவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர் வெல்வார் என்று ஜோதிடர்கள் சிலர் கூறுவதை கேட்டு ஆச்சரியமடைந்தேன் அத்துடன் அருவருப்பாகவும் இருந்தது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ராஜயோகம் இருப்பதாக அவர்கள் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் மகிந்தவுக்கு தவறான லக்னத்தை வழங்கியிருக்க வேண்டும் அல்லது நாட்டு மக்களை ஏமாற்றும் நோக்கில் தவறான ஆரூடங்களை கூறுகின்றனர்.

ஜனவரி 8 ஆம் திகதி மக்களால் வீட்டுக்கு அனுப்பப்பட்ட மகிந்த ராஜபக்ஷ, எப்படியாவது அதிகாரத்திற்கு வர வேண்டும் என்று முயற்சிப்பதாகவும்பொதுத்தேர்தலில் மக்கள்அவருக்கு நல்ல பாடத்தை கற்றுக் கொடுப்பார்கள் எனவும் இந்திக தொட்டவத்த தெரிவித்துள்ளார். (செ-11)


தேவை

கொழும்பு நகரில் சலூன் வேலைக்கு ஆள்கள் தேவை

உணவு, தங்குமிடம் வழங்கப்படும்

தொடர்பு: 0779780402 (1145)

A/L - 2015 மாணவர்களுக்கான "புவியியல் கருத்தரங்கு"

இடம் : DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

காலம் : யூலை - 18, 19, 20

ஆரம்பம் : 18-07-2015 - சனி- 12 மணி

ஆசிரியர். N. BABU

தொடர்பு: 0779365087 (1139)

பலரது வேண்டுகோளுக்கு அமைய

சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய

Business & Hotel Management

2 ஆம் அணி

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!



SEGi University & Colleges | B.H.M.S. Business & Hotel Management School | nmit | William Anglis Institute

MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA

அனுமதிகளுக்கு 077 36 16 798

கற்கைநெறி ஆரம்பம் ஜூலை 21 செவ்வாய்

பிரசித்திபெற்ற சுற்றுலா மையங்களுக்கான விசேட பயணம் & யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் நேரடிப் பயிற்சி

SIKARAM Get Set for Careers & Take off Your Dreams

FREE ENGLISH COURSE

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

(C-1594)

Sikaram (Pvt) Ltd.

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 1

சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை - கோண்டாவில்)

அமெரிக்காவில் நடைபெறும் விசேட ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் எங்கள் பாடசாலை மாணவர்களை ஆசீர்வதித்து வழியனுப்பும் வைபவம்

காலம்:- 16.07.2015 பி.ப 3.00 மணி

இடம் :- சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.

எமது பாடசாலை மாணவர்கள்

செல்வன் அரசகுலசூரியர் மயூரன்

செல்வன் ஜெயச்சந்திரன் மனோஜன்

சர்வதேச ரீதியில் அமெரிக்காவில் 26-07-2015 நடைபெறவிருக்கும் விசேட தேவையுடைய மாணவருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள்.

இலங்கையில் நடைபெற்ற தேசியப் போட்டியில் இவர்கள் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் வரலாற்று மகிழ்வைப் பகிர்வதோடு, அமெரிக்கா செல்லும் எமது பாடசாலை மாணவரை ஆசீர்வதித்து, வாழ்த்தி வழியனுப்பும் வைபவத்தில் தாங்கள் அனைவரும் கலந்து கொண்டு மாணவர்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம். (1142)

நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை. sivapoomi@gmail.com 021-222 7938

அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் சிவபூமி பாடசாலை

Data Analysis

இலவச கருத்தரங்கு

Microsoft excel

பயன்படுத்துபவர்கள் சகலருக்கும் மிகவும் பயனுள்ள விடயங்கள் கலந்துரையாடப்படும்.

பல்கலைக்கழக மாணவர்கள், CA, CIMA, ACCA மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள்

பாடசாலை ஆசிரியர்கள், அரச கருமங்களில் excel பயன்படுத்துபவர்கள் மற்றும் ஆர்வம் உள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம்

இடம் : Student Success Centre

கட்டணம் இலவசம்

காலம் : சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில்

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முற்பதிவினை மேற்கொள்ளவும்

தொடர்புகளுக்கு 0776169470

A/L 2015 மாணவர்களிற்கான மாபெரும் அரசியல் விஞ்ஞான கருத்தரங்கு

ஆசிரியர் - எஸ்.கோகுலன் B.A Hons.Poli.spl

இடம் - பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம் } 12.30 மணி தொடக்கம் 4.00 மணி வரை

காலம்- 18.07.2015 - சனி

19.07.2015 - ஞாயிறு

குறிப்பு- ❖ வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.

❖ அனுமதியினை முன்கூட்டியே நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளவும்.

❖ கைபேடுகள் வழங்கப்படும்.

பொருளியற் கல்லூரி

வாடகைக்கு உண்டு

Projector, Sound System

மற்றும் தளபாட வசதிகளுடன் கூடிய அழகிய வகுப்பறை யாழ்.நகரப் பகுதியில் வாடகைக்கு உண்டு. (1140)

தொடர்புகளுக்கு: 077 649 3351

MALROW திறப்புவிழா

MALROW Factory & Yaarl Show Room.

யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான தளபாட தொழிற்சாலை. இன்று காலை 7.30 மணி தொடக்கம் 9.00 வரையான சுபநேரத்தில் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி றோட் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் கௌரவ சி.நித்தியானந்தன் அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம். உங்களுக்கு வேண்டிய டிசைன்களில் பார்வையிட்டு அதேமாதிரியாக செய்து கொள்ளலாம்.

எமது உற்பத்திகள்



MALROW YAARL SHOW ROOM
3rd Mile Post, Pointpedro Road, Kalviyankadu, Jaffna.
0212231666
0770730332
(C-1592)


### வாக்களிப்பில் பங்குபற்ற முன் ஆயத்தம் செய்வோம்

1. வாக்காளர் அட்டையை முன்கூட்டியே பெற்றுக் கொள்வோம்.
2. வாக்காளர் அட்டை கிடைக்காத நிலையிலும் வாக்களிக்க உங்களுக்கு உரிமை உண்டு.
3. தேசிய அடையாள அட்டை வாக்களிப்புக்கு அவசியமானது.
4. தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில் தேர்தல் ஆணையாளரால் வழங்கப்படும் சிறப்பு அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளுங்கள்.
5. வாக்களிப்பு நிலையத்தை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.
6. நீங்கள் தெரிவு செய்யும் கட்சியையும் பிரதிநிதியையும் முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.
7. நோயாளர்கள், முதியோர்கள் வாக்களிப்பு நிலையத்துக்கு செல்வதற்கு வாகன முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
8. நேரத்துடன் வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்களியுங்கள்.

குறிப்பு: மேலதிக தேவைகளுக்கு உங்கள் கிராம சேவையாளரை நாடுங்கள்

வாக்களிப்போம் ஜனநாயகத்தைப் பேணுவோம்

அனுசரணை

கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் (C-1585)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.